விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 10 வியாழக்கிழமை (26.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# போர்க்குற்ற விசாரணை!

# இலங்கைக்கு காலக்கெடு



## நவநீதம்பிள்ளை எச்சரிக்கை

(நியூயோர்க்)

போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசு நம்பகமான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும். அதையும் மார்ச் மாதத்துக்குள் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் சர்வதேச சமூகம் தனியாக ஒரு விசாரணையை நடத்த வேண்டிவரும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் எச்சரித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் தோற்றுவிட்டோம் ஒப்புக் கொண்டார் பான் கீ மூன்

### ஜனாதிபதியுடனும் சந்திப்பு

(நியூயோர்க்)

இலங்கையில்இடம்பெற்ற போரின இறுதிக்கட்டத்தில் ஐ.நாடுகள் சபை தோல்வியடைந்து விட்டதாக ஐ.நா. பொதுச் செயலாளர்பான்கீமூன் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஐ.நா பொதுச்சபையின் 68-வது கூட்டத்தொடரில், பொது விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதேஅவர்இவ்வாறுதெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்ற முன்பாகவே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஐ.நாவின் செயற பாடுகள் தொடர்பான உள்ளக மீளாய வில், அமைப்பு ரீதியாக ஐ.நா.சபை தோல்வியை தழுவியுள்ளது.

குறித்த நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்த ஆதரவை வழங்க வில்லை. அத்துடன் ஐ.நா. அமைப்பு பொருத்தமான அல்லது முழுமை யாக செயற்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ.நா. பொதுச்சபை யின் 68-வது கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் விஜயம்செய்திருந்த ஜனாதிபதிமகிநத ராஜபகஷ ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள் ளார். நியூயோர்க்கில்

19-ம் பக்கம் பார்க்க

## சம்பந்தன் நீட்டும் கரத்தை அரசு பற்றிக் கொள்ள வேண்டும்

### மனோ கணேசன் கோரிக்கை



(கொழும்பு)

வடமாகாணசபைத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான் மையை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு பெற்றுவிட்டது. ஆகவே இன்று மக்கள் ஆணையை பெற்று விட் டோம். வட்டுகோட்டைக்கு தீர்மானத் திற்கு பின்பட்டுத்தெளிந்து புதிய தீர்மானத்தை எடுத்துவிட்டோம். சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தி பிரிந்து செல்


19-ம் பக்கம் பார்க்க

## 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

### இந்தியா வலியுறுத்தல்

(புதுடில்லி)

சர்வதேச சமூகத்துக்கு வழங் கிய முக்கியமான வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்று வதைஎதிர பார்த்துள் ளதாக இந தியா தெரி வித் துள் ளது.



அத்து டன், 13-வது திருத் தச் சட்ட மூலத்தை முழுமை யாகவும், அதற்குஅப பாலும் நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்வர வேண்டும் என் றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

புதுடில்லியில் இந்திய வெளிவிவ கார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட் டுள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள் ளதாவது, சர் வ தேசசமூகத் துக்கு மதிப் பளித்துவட மாகாணச பைத்தேர் தலை நடத தும் தனது பொறுபை இலங்கை அரசாங் கம் நிறைவேற்றியுள்ளது. வடமாகா ணத்திலுள்ள மக்களின் முன்னேறறத்துக்காக

19-ம் பக்கம் பார்க்க

## தேர்தல் முடிந்துள்ள போதும் வன்முறைகள் தொடர்கிறது

### சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைத் தேர்தல் முடிந்துவிட்ட போதிலும் பரவலாக தேர்தல் வன்முறைகள் தொடர்ந் தும் இடம்பெற்று வருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருக் கின்றது.

பல இடங்களிலும் பொது மக் கள் தாக்கப்படுவதும், துன்புறுத் தப்படுவதும் தொடர்கின்றது என் றும் யுத்தம் முடிந்தபின்னர் முதற் தடவையாகக் கைக்குண்டு தாக் குதல் நடத்தும் அளவுக்கு நிலை மை மோசமாகியிருப்பதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த வன்முறைச் சம்பவங் களை தமிழ்தேசிய கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாக தெரி வித்த சுரேஷ் பிரேமச்சந்திரன், அராலி பகுதியில் வீடுகளில் புகுந்த இலங்கை இராணுவத்தினர் பொது மக்களைத் தாக்கியதாகவும், சுன் னாகம், மல்லாகம் போன்ற பகுதி களில் வீதிகளில் சென்ற பொது மக்கள் தாக்கப்பட்டிருப்பதாகவும் குற்றம் சுமத்தினார்.

நெடுந்தீவிலும் பொதுமக்கள் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டிருக் கின்றார்கள். கொடிகாமம் கச்சாய் பகுதியில் தமிழ்த்தேசிய கூட்டமைப் பின் ஆதரவாளர் ஒருவருடைய மோட்டார் சைக்கிளுக்கு எரியூட் டப்பட்டிருக்கின்றது. மல்லா கம் பகுதியில் தமிழ்த்

20-ம் பக்கம் பார்க்க

## அரசியல் தீர்வும் இழப்புக்கு நீதியுமே வடக்கில் மக்களுக்குத் தேவையானது!

### இரா.சம்பந்தன் பதிலடி

(கொழும்பு)

வடக்கில் மக்களுக்குத் தேவை சுய கௌரவத்துடன் கூடிய அரசியல் தர்வும், அவர்களது இழப்புகளுக்கு நீதியும்தான். இதை விடுத்து சாலை களை அமைப்பது, மின்சாரக் கம்பங் களை நடுவது போன்றவற்றால் மட்டும் மக்களை திருப்திப் படுத்த முடியாது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின

20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மீளவும் மாவீரர் துயிலும் இல்லமா? அனுமதியளிக்க முடியாது-அரசு

(கொழும்பு)

மாவீரர் துயிலும் இல்லங்களை மீள அமைக்க இடமில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கல்லறைகளை மீள அமைப்பதற்கு வட மாகாணசபைக்கு அதிகாரம் அளிக்கப் போவதில்லை என அரசாங்கத்தின் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் மாவீரர் துயிலும் இல்லங்களை மீள அமைப்பதற்கு புதிதாக தெரிவாகியுள்ள வட மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் முயற்சித்து வருகின்றனர்.

இது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருக்கு தகவல் கிட்டியுள்ளது. எனினும், இந்த முயற்சிக்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என உயர் பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மாவீரர் துயிலும் இல்லங்களை மீள அமைப்பது தொடர்பிலான யோசனைத் திட்டமொன்று வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டால், தீர்மானம் நிறைவேற்றியவர்களுக்கு எதிராக தேசியப்பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுத்தும் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளது. (எ-11)

# ஜனாதிபதி-பான் கீ மூன் சந்திப்பு; நழுவினார் சவேந்திர சில்வா

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதிவதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஐ.நா பொதுச்செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் இடையிலான சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபைக்குள் வந்திருந்த அவர், ஜனாதிபதியும் செயலாளர் நாயகம் சந்திப்பதற்கு முன்பாக அங்கிருந்து நழுவிச் சென்று விட்டதாக கூறப்படுகிறது.

சவேந்திர சில்வா ஜனாதிபதி தலைமையிலான பிரதிநிதிகள் குழுவில் முக்கியமானவராக இருந்த போதிலும் ஜனாதிபதி மற்றும் மூன் இடையிலான சந்திப்புக்கு முன்னர் அங்கிருந்து உடனடியாக வெளியேறியதாகவும் சந்திப்பு இடம்பெற்ற அறையில் அவர் இருக்கவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் அமைதி காக்கும் படையின் ஆலோசனை குழுவில் இடம்பெற்றிருந்த சில்வா அண்மையில் அதில் இருந்து நீக்கப்பட்டார்.

இலங்கையில் பிரதிவதிவிடப் பிரதிநிதியான சவேந்திர சில்வா, வன்னியில் விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரில் மனித உரிமைகளை மீறியதாக குற்றம் சுமத்தப்படும் சர்ச்சைக்குரிய 58 ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதியாக பணியாற்றினார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கையில், சரணடைந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பலரை 58ஆவது படைப் பிரிவினர் சுட்டுக்கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் தொடர்பில் சவேந்திர சில்வாவிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என அமெரிக்காவில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-11)

# 41 இந்திய மீனவர்கள் நேற்று விடுதலையாகினர்

இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 இந்திய மீனவர்களை மன்னார் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழகத்தின் இராமேஸ்வரம், மண்டபம் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த மீனவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம், மண்டபம் கடல் பகுதிகளில் இருந்து 5 விசைப்படகுகளில் 21 மீனவர்கள் ஜூலை 6ஆம் திகதி காலை கடலுக்குச் சென்றனர்.

இந்த மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லையில் மீன்பிடித்த நிலையில் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அதேவேளை ஓகஸ்ட் 6ஆம் திகதி 5 விசைப் படகுகளில் மேலும் 20 மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் வவுனியா சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், மன்னார் நீதிமன்றில் நேற்று காலை ஆஜர்படுத்தப்பட்ட 41 பேரையும் விடுதலை செய்ய நீதிபதி ஆனந்தி கனகரத்தினம் உத்தரவிட்டார். பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகுளை விடுவிப்பது தொடர்பான விசாரணையை டிசெம்பர் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அன்றைய தினம் படகுகளில் உண்மையான பதிவேடுகளுடன் படகு உரிமையாளர்கள் ஆஜராக வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (எ-11)

# கொழும்பு-யாழ். பயணிகள் சேவை உரிமையாளருக்கு எதிராக வழக்கு

கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் 13 பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதல் முறையாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது.

அனுமதிப்பத்திரம் இன்றி பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனையில் இருந்து அம்பதலை ஊடாக யாழ்ப்பாணம் வரை சேவையில் ஈடுபடும் 87 என்ற பஸ் இலக்கத்தை கொண்ட பஸ் உரிமையாளர்களுக்கு எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (எ-11)


# உளமார்ந்த நன்றிகள் பல

தமிழ்த் தேசியத்தினையும் இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சுயாட்சியினையும் ஏற்று தமிழரசுக் கட்சிக்கும் எனக்கும் வாக்களித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எனது நன்றிகள் பல...



**வேலுப்பிள்ளை சிவயோகன்**

(வடக்கு மாகாண சபை உறுப்பினர்)

(403)


# சரத் பொன்சேகாவுக்கு இராணுவத்தில் ஆதரவு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இராணுவத்தில் பணியாற்றும் படையினர் மத்தியில் இன்னும் செல்வாக்கு இருப்பதாக அரச புலனாய்வு பிரிவின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி இம்முறை தேர்தலில் புத்தளம், குருணாகல், கண்டி மாவட்டங்களை சேர்ந்த இராணுவத்தில் பணியாற்றும் பெரும்பாலான வாக்காளர்களை கவர்ந்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது. இராணுவத்தில் பணிபுரியும் அதிகமானோர் குருணாகல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள். முதல் முறையாக தேர்தலில் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சிக்கு 10 வீத தபால் மூல வாக்குகள் கிடைத்துள்ளன.

குருணாகல் மாவட்டத்தில் 7.7 வீத தபால் வாக்குகளும், கண்டி மாவட்டத்தில் 10.36 வீத தபால் வாக்குகளும் கிடைத்துள்ளன.

புத்தளம் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் இராணுவத்தில் பணியாற்றும் வாக்காளர்கள் குறைவாக இருந்த போதும் அந்த கட்சி 6.19 மற்றும் .42 வீத தபால் வாக்குகளை பெற்றுள்ளது. (எ-11)


## மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை



சிவன்கோவில்
ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்
காரைநகர்

அன்புடையீர்,

**பொதுக்கூட்டம்**

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் (2013-2014) எதிர்வரும் 06.10.2013 ஞாயிறு காலை 9 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களை தவறாது கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| **ஆதீனகர்த்தாக்கள்** | ஈ.எஸ்.பி.நாகரத்தினம் | நா.பாலகிருஷ்ணன் |
| ஆ.அம்பலவிமுருகன் | **தலைவர்** | **செயலாளர்** |
| மு.சுந்தரலிங்கம் | | |

(4029)

உலகத்தரம் வாய்ந்த மூன்று கணக்கீட்டு கற்கை நெறிகளில் ஒன்றை யாழ் நகரிலேயே தொடர விரும்புகிறீர்களா?

CA · ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS · CIMA

K-AIMS We Make You Progress Everyday..

No. 147 - 2/2,
K.K.S Road, [top of DFCC Bank]
**Jaffna**
0773722104/0212219422

No 35-1/1, Upatissa Road,
**Colombo 04**
0772 555 814

புதிய பிரிவுகள் **1st October** முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன் (சி-4913)

## வீடு விற்பனைக்கு

பழைய வீதி, கோப்பாய் மேற்கு கோப்பாய் வீதி, வீரபத்திரர் கோயில் பின் பக்க ஒழுங்கையில் 6 ½ பரப்பு காணியில் 6 அறைகள் சாமி அறையுடன் 2 Hall, கிணறு, Toiled, Bathroom போன்ற எல்லா வசதிகளுடன் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட பாவித்த குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம் போட்டோ கொப்பி மெசின் என்பவையும் விற்பனைக்குண்டு. விலைகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு:** மொத்தமாக 6 ½ பரப்பு காணி வீட்டுடன் சேர்ந்து 2 பரப்பு காணியும் மேலும் 2, 2 பரப்பு காணி சொரியாகவும் விற்கப்படும்.

**தொடர்புகளுக்கு : 0775462482** (4024)

## தொடர்ந்தும் மேலதிக சேவையில்...

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

**குறிப்பு:** விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4911) T.P. No.:-021 222 5392

## விற்பனைக்கு

யமஹா மேற் 50 மோட்டார் சைக்கிள் ஒன்று விற்பனைக்குண்டு. விலை ரூபா 35,000/- தொடக்கம் 45,000/- இற்கும் இடையில் தொடர்புகொள்ள வேண்டிய

**தொ.பே: 0714546869** (4027)

# இன்று ஒரு தகவல்

## வரம்

பத்மாசுரன் என்ற அரக்கன் இருந்தான். அவன் மிகுந்த வலிமை படைத்தவன்.

அவன் முனிவர்களுக்கெல்லாம் இடையூறுகள் செய்து வந்தான்.

இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட நாரதர் அவனிடம் வந்தார்.

"என்னப்பா? எப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தார்.

"உம்மை மாதிரி சாதுவாக இருந்து விட்டால் ஒரு கஷ்டமும் இல்லை. என்னை மாதிரி இருப்பதால் ஏகப்பட்ட கஷ்டம்! எங்களுக்கு எவருமே மரியாதை கொடுப்பதில்லை. எங்களை அழித்துவிட வேண்டும் என்றே நினைக்கிறார்கள்" என்று குறைப்பட்டுக் கொண்டான்.

உடனே நாரதர் அதற்கு ஒரு வழி சொன்னார்.

"கவலைப்படாதே! சிவனை நினைத்து தவம் செய்! உடனே அவர் வந்து விடுவார். என்ன வரம் வேண்டும் என்று கேட்பார். ஏதாவது ஒரு வரம் கேள்! அதன் பின் உனக்கு மரியாதை அதிகமாகும்!" என்றார்.

"என்னவரம் கேட்கலாம்?" என்றான் அவன்.

"எதிரிகளெல்லாம் உன்னைக் கண்டு பயப்பட வேண்டும். அவ்வளவு ஏன் சிவனே உன்னைக் கண்டு பயப்பட வேண்டும். அதுமாதரி ஒரு வரம் கேட்டு வாங்கிக் கொள்!" என்றார் நாரதர்.

"எப்படியான வரம் வாங்கினால் எல்லோரும் பயப்படுவார்கள்?" என்று கேட்டான்.

"அதாவது... உன் கையை யாருடைய தலையில் வைத்தாலும் அவர் உடனே எரிந்து சாம்பலாகிவிட வேண்டும்! அப்படி ஏதாவது வரத்தை வாங்கி விடு!" என்றார்.

சரி என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டு போனான். கடுமையான தவம் இருந்தான். சிவபெருமான் முன்னால் வந்து நின்றார்.

"பத்மாசுரா! உன் தவத்தை மெச்சினேன்! என்ன வரம் வேண்டும் கேள்!" என்றார்.

"நான் யார் தலையில் கையை வைத்தாலும் அவர் எரிந்து சாம்பலாக வேண்டும்!" என்றான்.

அவரும் அப்படியே வரம் கொடுத்தார்.

பத்மாசுரன் நடந்து வந்து கொண்டிருந்தான். வழியில் நாரதரைக் கண்டு விடயத்தைச் சொன்னான். "அதுசரி! அவர் நிஜமாகவே வரம் கொடுத்தாரா? அதை நீ சோதித்துப் பார்த்தாயா?" என்று கேட்டார் நாரதர்.

"நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும். உங்கள் தலையை கொஞ்சம் காட்டுங்களேன்!" என்றான்.

நாரதர் எடுத்தார் ஓட்டம்.

இருந்தாலும் ஒரு யோசனையை சொல்லிவிட்டு ஓடினார்.

"என்னை சாம்பலாக்கி விட்டாயானால் அதற்குப்பின் உனக்கு யோசனை சொல்வதற்கு ஆள் இருக்காது. அதனால் உனக்கு வரம் கொடுத்தவரின் தலையிலேயே கையைவைத்துப்பார்! பலிக்கவில்லை என்றால் அவரையே பிடிக்கலாம்!" என்றார்.

அவனும் சிவனைத் தேடிக் கொண்டு புறப்பட்டான்.

நாரதர் ஓடி வந்து திருமாலிடம் விடயத்தைக் கூறினார்.

உடனே திருமால் சிவனிடம் ஓடினார். அங்கு அவரை பத்மாசுரன் துரத்திக் கொண்டிருந்தான்.

திருமால் அழகிய மோகினி உருவம் எடுத்தார். பத்மாசுரன் மோகினியின் அருகில் வந்து "என்னை கல்யாணம் பண்ணிக் கொள்" என்றான்.

"சரி பண்ணிக் கொள்கிறேன்! அதற்கு முதல்போய் குளித்துவிட்டு எண்ணெய் தடவி சீவிக் கொண்டு வா!" என்றது மோகினி.

பத்மாசுரன் குளிப்பதற்கு ஆற்றில் இறங்கினான். தலையை தேய்ப்பதற்காக கையை தலையில் வைத்தான். அவ்வளவு தான்!

அவன் எரிந்து சாம்பலாகி விட்டான். அதன்பின் எல்லோரும் நிம்மதியாக இருந்தார்கள்.

வரம் கொடுத்துவிட்டு மாட்டிக் கொண்டால் இப்படித்தான் தப்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அவசரப்பட்டு வரம் கொடுப்பதும் தவறு! வாக்குக் கொடுப்பதும் தவறு! எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அன்றைக்கு அப்படித்தான் ஒருவர் என்னிடம் வந்தார்.

"மனித நேயம் என்றால் என்ன?" என்றார்.

"ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கிறது" என்றேன்.

"அப்படியானால் ஒரு 50 ரூபா கைமாற்க கொடுங்க" என்று கேட்டான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சிவயோக சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு மாணவர்களுக்கு கட்டுரை போட்டி

சிவயோக சுவாமிகளின் 50 ஆவது குருபூசை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கட்டுரைப் போட்டியொன்றை நடத்த அகில இலங்கை இந்து மாமன்றம் தீர்மானித்துள்ளது.

இப்போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும். இதன்படி கீழ்ப் பிரிவில் தரம் 7,8,9 பயிலும் மாணவர்கள் யாழ்ப்பாணத்துச் சித்தர் வரிசையில் சிவயோக சுவாமிகள், சிவயோக சுவாமிகள் ஆற்றிய சமய, சமூகப் பணிகள், சிவதொண்டன் நிலையங்களும் அவற்றின் பணிகளும், சிவயோக சுவாமிகளின் குரு பக்தி, சிவயோக சுவாமிகள் வகுத்துத் தந்த இளைஞர்களுக்கான ஒழுக்க விதிகள் ஆகிய தலைப்புக்களில் ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து 150 தொடக்கம் 200 வரையான சொற்களிலும், மத்திய பிரிவில் தரம் 10, 11 பயில்பவர்கள் சிவயோக சுவாமிகளின் போதனைகளும் சாதனைகளும், "சிவதொண்டன் சிவதொண்டு செய்வோர் சிறப்புக்களும்" சிவயோக சுவாமிகள் தரும் விளக்கம், சிவயோக சுவாமிகளின் தெய்வ பக்தியும் தேசபக்தியும், சிவயோக சுவாமிகளின் சீடர்களும் அவர்களின் பணிகளும், "நல்லொழுக்கம்" பற்றிய சிவயோக சுவாமிகளின் சிந்தனைகள் ஆகிய தலைப்புக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 350 தொடக்கம் 500 வரையான சொற்களிலும் மேற்பிரிவில் தரம் 12, 13 பயிலும் மாணவர்கள் சிவயோக சுவாமிகள் போதித்த "மகாவாக்கியங்கள்" விளக்கம், சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள், சிவயோக சுவாமிகள் காட்டும் சமரச சன்மார்க்கநெறி என்னும் பொது அறம், சிவயோக சுவாமிகளின் வழிகாட்டல்களும் தற்கால சமூகத்தவர்க்கு அவற்றின் பொருத்தப்பாடும், ஈழத்துச் சித்தர், பரம்பரைச் சித்தர்களின் இயல்புகளும் இலட்சணங்களும் ஆகிய தலைப்புக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 350 தொடக்கம் 500 வரையான சொற்களிலும் கட்டுரைகளை அனுப்பலாம்.

கட்டுரைகளைஏ4தாளின் ஒரு பக்கத்தில் கணனியில் தட்டச்சு செய்து அல்லது உறுப்பான எழுத்தில் கையால் எழுதி அனுப்ப வேண்டும்.

போட்டியாளர்களின்கட்டுரைகள் அவர்களது சொந்த ஆக்கங்களாக இருப்பதுடன் அவை எந்தவொரு பிரசுரத்திலிருந்தும் மதிப்புச் செய்ததாக இருக்கக் கூடாது.

கட்டுரைப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடம் பெறுபவர்களுக்கு பதக்கங்களுடன் இந்து மாமன்ற நூல்களும் வழங்கப்படும். அத்துடன் முதலாம் பரிசு பெறும் கட்டுரைகள் எமது ஆன்மீக இதழான "இந்து ஒளி" யில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு கட்டுரையிலும் ஏ 4தாளில் பின்வரும் தகவல்கள் அடங்கிய கடிதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதில் முழுப்பெயர், முகவரி, வயது, கல்விபயிலும் பாடசாலை, கல்வி பயிலும் ஆண்டு, போட்டியில் பங்கு கொள்ளும் பிரிவு, மாணவரின் கையொப்பம், அதிபரின் உறுதிச் சான்றிதழும், ஒப்பமும் திகதியும் என்பன உள்ளடக் கப்பட வேண்டும்.

கட்டுரைகள் யாவும் General Secretary, All Ceylon Hindu Congress, 91/5, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo-02 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (அ)

# முத்துக்களுடன் 5பேர் கைது

ஒரு கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதியான 91 முத்துக்களை 31 இலட்சம் ரூபாவுக்கு் விற்பனை செய்ய முயற்சித்த 5 சந்தேக நபர்களை பொரலஸ்கமுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் பெல்லன்வில விகாரைக்கு அருகில் வைத்து நேற்று முன்தினமிரவு கைது செய்யப்பட்டதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் நீர்கொழும்பு பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் கூறினர்.

தொல்பொருள் அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட இந்த முத்துக்கள் இயற்கையான முத்துக்கள் எனவும் அவை ஒரு கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதியானவை எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் நுகேகொட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 80 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 60 | 60 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 100-110 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 90 |
| பாகற்காய் | 100 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 |
| பயற்றங்காய் | 100 | 40 | 40 |
| லீக்ஸ் | 100 | 60 | 100 |
| பீற்றூட் | 20 | 20 | 30 |
| கறிமிளகாய் | 60 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 140 | 110 | 120 |
| போஞ்சி | 120 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 25 |
| தேசிக்காய் | 400 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 60 | 120 |

# இராசி பலன்

*26.09.2013*
*(புரட்டாதி 10, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*சப்தமி முன்னிரவு 9.04 மணிவரை*
*மிருகசீரிடம் பின்னிரவு 3.55 மணிவரை*
*இராகுகாலம் 1.32-3.02 மணிவரை*
*சுபநேரம் 7.32-9.02 மணிவரை*

**மேடம்** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பணம் பற்றிய கவலை தீரும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** பிதா சிந்தையுண்டு, ஒரு செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு.

**சிங்கம்** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, ஆரோக்கியமான நாள், சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர் வருகையுண்டு.

**கன்னி** மறைமுக எதிர்ப்புகள் மாறும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உஷ்ண சம்பந்மான ரோகங்கள் ஏற்படலாம், ஆன்றோர் சந்திப்புண்டு, தொழிலில் அதிகம் பாடுபடுவீர்கள்.

**துலாம்** தேவையற்ற அச்சங்கள் ஏற்படலாம், தேக நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், கௌரவக் குறைவான முறையில் சிலர் நடந்து கொள்ளலாம், செலவுகளுக்கு பணக் குறைவு ஏற்படலாம்.

**விருச்சிகம்** வாகன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும், காரிய அனுகூல முண்டு, உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ்மிக்கவர்களின் மதிப்பு கிடைக்கும், உடல் நலம் சீராகும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து நேரலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களைக் காணலாம், முத்தான வாய்ப்புகள் இல்லம் தேடி வரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.

வளவன்

# மேலதிக மழைநீர் வழிந்தோட கீரைவாய்க்காலை புனரமைக்குக

மறவன்புலோ, தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளின் கால போகச் செய்கை இவ்வருடமும் அழிவடையும் நிலை ஏற்படுமென இப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மழைகாலங்களில் இப்பகுதியிலுள்ள பனங்காய்குளம் மழைகாலங்களில் நீர் நிறைந்து மேலதிக நீர் வழிந்தோட முடியாது வயற்காணிகளுக்குள் மழைநீர் தேங்குவதால் நெற்பயிர்கள் அழிவடைகின்றன.


இப்படி கடந்த வருடகால போகச் செய்கையின் போதும் சுமார் 500 ஏக்கரில் விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் அழிவடைந்தன.

இக் குளத்திலுள்ள மேலதிக நீரை கீரைவாய்க்கால் மூலம், சாவகச்சேரி கடனீரேரிக்குள் வழிந்தோட செய்யமுடியும்.

இக் கீரைவாய்க்காலை புனரமைத்து தருமாறு கடந்த வருடமும் விவசாயிகள் உரியவர்களுக்கு சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனினும் இதுவரை இவ் வாய்க்கால் புனரமைக்கப்படாமையினால், கால போகச் செய்கை இவ்வருடமும் அழிவடைந்து விடுமோ என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ-9-37)




# தீர்வை நோக்கிய பாதையில் துணிச்சலுடன் பயணிப்போம்

## கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் சுரேஷ் எம்.பி.



**(யாழ்ப்பாணம்)**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ் மக்கள் அங்கீகரித்தமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக் கொண்டு, இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச நாடுகளும் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலும் அவர்களுக்குப் புரியக்கூடிய மொழியிலும் நீங்கள் மிகப்பலமான, உறுதியான ஒரு செய்தியை நடைபெற்ற வட மாகாண சபைத் தேர்தலின் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றீர்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளை யுத்தத்தில் தோற்கடித்து அதன்மூலம் தமிழ் மக்களைத் தோற்கடித்ததாக சிங்கள மக்கள் மத்தியில் ஒரு மாயையை உருவாக்கி நாடளாவிய ரீதியில் பல வெற்றி விழாக்களைக் கொண்டாடி, தமிழ் மக்களின் பூமியில் தமிழ் மக்களை வெற்றிகொண்டதாக பல்வேறு வெற்றிச் சின்னங்களை உருவாக்கி, தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகள் எதுவும் தேவையில்லை. வீதிகள் அமைத்தால் போதுமானது. இந்த அபிவிருத்திகளுடன் அவர்கள் வாழ வேண்டும் என்ற தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருந்த அரசாங்கத்திற்கு நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குக் கொடுத்த ஆணையானது அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நீங்கள் முற்றாக நிராகரிக்கின்றீர்கள் என்பதை தெட்டத்தெளிவாக நிரூபித்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு நீண்டதும் நிலைத்திருக்கக்கூடியதும் உறுதியானதுமான ஒரு தீர்வு முக்கியம் என்பதை உங்கள் ஆணை வெளிப்படுத்தியிருப்பதுடன், அந்தத் தீர்வை நோக்கிய பாதையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணிச்சலுடன் நடைபோட வேண்டும் என்பதையும் நீங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றீர்கள். ஒரு பொறுப்புமிக்க அரசியல் கட்சி என்ற அடிப்படையில் உங்கள் ஆணையை நாங்கள் சிரமேற்கொண்டு செயற்படுவோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது அத்தியாவசியமானது என்பதுடன், அதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் மிக முக்கியமானது என்பதையும் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகப் பாடுபட வேண்டுமென்பதையும் உங்கள் ஆணை வெளிப்படுத்தியிருக்கின்றது.

அதேசமயம் தமிழ் மக்களின் வெற்றிக்காகப் பங்களித்த புலம்பெயர் உறவுகள், ஊடகங்கள், சமூக வலையமைப்புகள், மனித உரிமை அமைப்புகள், சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள், உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்கள், மனிதவுரிமை ஆர்வலர்கள் ஆகிய அனைவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)



கனடா வாழ் சமூக சேவையாளர்களின் அனுசரணையுடன் யாழ். எய்ட் அமைப்பு யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான உதவிப் பொருட்களை வழங்கியது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன் மாணவர் ஒருவருக்கு உதவிப் பொருட்கள் வழங்குவதைப் படத்தில்காணலாம். (படம் :-மானிப்பாய் செய்தியாளர்)

# இளையோருக்கான தொழில் வழிகாட்டல் கருத்தமர்வு

(சாவகச்சேரி)

வேல்ட்விசன் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் பிரிவினரால் தமது வலயத்துக்குட்பட்ட இவ்வாண்டு உயர் தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வுகளை இரண்டு நாட்கள் நடத்தவுள்ளனர்.

இதன்படி முதலாம் நாள் செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணி வரையும் இடம்பெறவுள்ளது.

இச் செயலமர்வுகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஏனைய பாடசாலை மாணவர்களுக்கு குறிப்பாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவ.டிறிபேக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வித்தி., மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, உஷன் இராமநாதன் ம.வித்தி., வரணி ம.வித்தி., மீசாலை விக்கினேஸ்வரா ம.வித்தி., கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, நாவற்குழி ம.வித்தி., கைதடி முத்துக்குமாரசாமி ம.வித்தி. ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இதில் இலங்கையின் உல்லாச பயணத்துறை, CIMA பாடத்துறை விளக்கம், வங்கித் தொழில் வாய்ப்புக்கள் பற்றிய விளக்கம், பட்டப்படிப்பு காலத்தினுள் கலைப் பட்டதாரிகள் நிறைவு செய்யக் கூடிய கற்கை நெறிகள், போதைப் பொருள் பாவனையும் உடல் பாதிப்பும், ஹோட்டல் முகாமைத்துவம், உயர்தொழில் நுட்ப கல்வி ஆகிய விளக்கங்களும் தொழில் வாய்ப்பு பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப் படவுள்ளது. (அ-9-29)

# ஆஸி. வரும் அகதிகள் குறித்து தகவல்கள் வழங்கோம்

## ஆஸி. அரசு அறிவிப்பு

அவுஸ்திரேலிய கடற்பரப்புக்கு வரும் சட்ட விரோத அகதிப் படகுகள் தொடர்பிலான தகவல்களை இனிமேல் வழங்கப் போவதில்லை என அந்த நாட்டின் அரசாங்கம் அறிவித்துள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் வரும் சட்டவிரோத அகதிகளை திருப்பியனுப்புவது உட்பட்ட நடவடிக்கைகளை அவுஸ்திரேலியாவின் விசேட படையினர் மேற் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அகதிகளை திருப்பியனுப்புவது உட்பட்ட விடயங்களை மனித உரிமை காப்பு அமைப்புக்கள் விமர்சனம் செய்து வருவதன் காரணத்தால் படகு அகதிகள் தொடர்பான தகவல்களை உடனடியாக வழங்குவதை தவிர்க்கவுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட்மொரிசன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத படகுகளை தடுப்பது அவுஸ்திரேலிய மக்களின் நலன்களை கருத்திற்கொண்டாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே தேவையேற்படும் போது மாத்திரமே சட்டவிரோத படகு அகதிகள் தொடர்பான தகவல்களைத் தாம் வழங்கவிருப்பதாக மொரிசன் கூறியுள்ளார். இதேவேளை கடந்த 12 மாதங்களுக்குள் அவுஸ்திரேலியாவுக்கு 400 படகுகளில் 45 ஆயிரம் பேர் சென்றுள்ளதாக தரவுகள் மூலம் தெரியவந்துள்ளன. (அ-7)

# வடக்கு மாகாண சபைக்கும் ஒத்துழைப்பு வழங்குவோம்

## விஜயகாந்த் தெரிவிப்பு

வடமாகாண சபைக்கான முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள விக்னேஸ்வரனுக்கு தே.மு.தி.க நிறுவன தலைவர் விஜயகாந்த் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கை வடக்கு மாகாணத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அமையவிருக்கும் அரசுக்கு தலைமை ஏற்று முதலமைச்சராக பொறுப்பேற்கவுள்ள முன்னாள் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தேர்தலில் ஈழத் தமிழர்கள் ஜனநாயகத்தின் மீது தங்களுக்கு இருக்கும் நம்பிக்கையை மிக தெளிவாக உணர்த்தி இருக்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதைப் புரிந்து கொண்டு இலங்கை அரசு அந்த பகுதியில் இருக்கிற இராணுவத்தை உடனடியாக விலக்கிக் கொண்டு புதிதாக ஆட்சிக்கு வந்துள்ளவர்கள் ஆட்சி நடத்திட ஒத்துழைப்பு தருவதோடு அதிகாரபரவலையும் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# ஜப்பானின் மூன்று கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில்

ஜப்பானின் கரையோர சுய பாதுகாப்பு படையினரின் மூன்று கப்பல்கள் கொழும்புதுறை முகத்துக்கு வந்தடைந்துள்ளன. நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு இந்த கப்பல்கள் கொழு ம்பு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கப்பல்களை வரவேற்கும் முகமாக நிகழ்வொன்றை இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் நடத்தினர். 143 மீற்றர் நீளத்தை கொண்ட கசிமா எனும் பயிற்சி கப்பல் மற்றும் 130 மீற்றர் நீளத்தைக் கொண்ட சிராயுகி இஸோயுகி எனும் நாசகாரி கப்பல் என்பனவே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. இவை மூன்றும் 200 க்கும் 300 க்கும் இடைப்பட்ட கடற்படை வீரர்களை காவிச் செல்லும் திறன் கொண்டவை. இன்று வரை வரை இந்த கப்பல்கள் இலங்கையில் தரித்து நிற்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா : 16.5 சூ,செ 11<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில: கட்டடப் பொறியியலாளர் கட்டட நிர்மாணம் கனடா **Citizen**<br>தொ.இ:B2225 | பிறப்பு: 1983 இந்து (DO)<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 68.5<br>உயரம்: 5' 5" செவ் 7<br>தகைமை/தொழில்: பட்டதார அரச உத்தியோகம்<br>தொ.இ:G1011 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>உயரம்: 5'3" கி.பா :18<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர் கணனி திருத்துநர்<br>தொ.இ:B2226 | பிறப்பு: 1969 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா :46 செவ் 8 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: **BCom** மின்சார ஊழியர்<br>தொ.இ:G1014 |
| பிறப்பு: 1975 இந்து(KO)<br>நட்சத்திரம்: அச்சுவனி 2<br>கி.பா :75 செவ் 8 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில: **Diploma in Electronic&Electrical Engineer UK PR**<br>தொ.இ:B2229 | பிறப்பு: 1972 இந்து(Kurukkal)<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா : 12.75<br>உயரம்: 4' 8" சூ,செவ் 2<br>தகைமை/தொழில்: **O/L**<br>தொ.இ:G1015 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா :55 செ7<br>தகைமை/தொழில: **A/L Jordan Work Permit**<br>தொ.இ:B2233 | பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா :46 செ 12 உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: **BSc, B.Tech, MSc Following**<br>தொ.இ:G1016 |

சகல தொடர்புகளுக்கும்:-


**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

# உரிமையை உலகறியச் செய்த உன்னதர்களே!
# உங்களுக்கு எம் மனம் நிறைந்த நன்றிகள்




நடந்து முடிந்த வடக்கு மாகாண சபை - 2013 தேர்தலிலே இலங்கை தமிழ் அரசுக் கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) சார்பில் தமிழர் உரிமையை கோசமாக வைத்து தேர்தலில் களமிறங்கிய எம்மை பல இடர்பாடுகள், நெருக்கடிகள், எதிர்பார்ப்புகள் நிறைந்த சூழலில் தமிழ்த் தேசியத்தின் மீது கொண்டிருந்த அசையாத பற்றுறுதியை நெஞ்சிலே சுமந்து பெறுமதியான வாக்கு ஆயுதங்கள் மூலம் எங்களை வெற்றிபெற வைத்தீர்கள் அரசிற்கும் அடிவருடிகளுக்கும் அதற்கு மேலாய் சர்வதேசத்திற்கும் உரிமை இது என உரைத்தீர்கள். சலுகைகளுக்கும் வேசங்களுக்கும் வேடதாரிகளுக்கும் விலைபோகாது வீறு கொண்டெழுந்து வீட்டுக்கு புள்ளடியிட்டு தன்மானத் தமிழர்களின் மறப் பண்பை உலகறியச் செய்தீர்கள். உங்கள் இல்லங்களில் காலடி வைத்தோம். தெருக்களில் சந்தித்தோம். தொலைபேசியினூடாக அளவளாவினோம் உண்மையை . உணர்ந்து வலி தந்தோரை தோற்கடிக்க பெருமக்கள் நீங்கள் உங்கள் பலம் பற்றி நின்று தமிழர் உரிமையை இத்தேசத்தில் வென்றெடுப்போம், ஒன்றுபடுவோம், உறுதி கொள்வோம்.



பசுபதி
அரியரத்தினம்



தம்பிராசா
குருகுலராசா



சுப்பிரமணியம்
பசுபதிப்பிள்ளை


(சி/4914)

# வளப்பற்றாக்குறைகளுடன் முல்லை. பொதுநூலகம்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

**கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முல்லைத்தீவு பொது நூலகம் அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**




கடந்த 1980 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு போருக்குப்பின் 2010ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வருகின்ற இப் பொதுநூலகம் கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து முல்லை நகரத்துக்குள் அமைக்கப்பட்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் இயங்கி வருகின்றது.

எனினும் இந்நூலகம் போதிய வசதிகளின்றி இயங்கி வருவதால் நுகர்வோர் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

முல்லைத்தீவு பட்டணம், முல்லைத்தீவு தெற்கு, வண்ணாங்குளம், கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, கோவிற்குடியிருப்பு, மணற்குடியிருப்பு, சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, உப்புமாவெளி ஆகிய பத்து கிராம சேவையாளர் பிரிவின் 22 கிராமங்களில் வாழும் 2ஆயிரத்து 708 குடும்பங்கள் இப் பொது நூலகத்தையே பயன்படுத்துகின்றனர். மேலும் வாசிப்பு திறன் விருத்திக்கான நூல்களும் பற்றாக் குறையாகவுள்ளது . நூலகத்தின் உள்ளே அறிவித்தல் பலகையும் காட்சிப் படுத்தப்படவில்லை, நூலக உதவியாளர்களும் நியமிக்கப்படவில்லை, நூலக வீதியும் புனரமைக்கப்படவில்லை, நூலக முற்றம் சமதரையின்றி காணப்படுவதால் நூலக சூழலில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

நூல்களைப் பயன்படுத்துவோருக்கான இருக்கைகள் போதாமையால் நூலகப் பயனாளிகள் சிரமங்களை எதிர் கொள்கின்றார்கள்.

மேலும் நூலகப் பயனாளிகளின் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைக்க வாகன தரிப்பிட வசதியும் இல்லை.

இந் நூலகத்தை இப்பகுதியின் 6 பாடசாலைகளை சேர்ந்த 2ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களும் பயன்படுத்துகின்றனர்.

எனவே இந்நூலகத்திற்கான வளங்களை பெற்றுத் தர வேண்டுமென அப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# வீதிகளை புனரமைக்குக



(குருமன்காடு)

வவுனியா நகர சபை மற்றும் பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகள் புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

போரினால் இடம் பெயர்ந்து மீளக் குடியேறி மூன்று வருடங்களாகியும் சேதமடைந்த வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படவில்லை.

பண்டாரிக்குளம், உக்கிளாங்குளம், சிதம்பரபுரம், கோவில்குளம், கோமரசன் குளம், தோணிக்கல், கூமாங்குளம், தவசிக்குளம் ஆகிய வீதிகள் உட்பட பல வீதிகள் புனரமைக்கப்படாதுள்ளன.


பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் வீதிகள் புனரமைக்கப்படாமையால் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

எனவே துறைசார்ந்த அதிகாரிகள் இதனை கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதிகளின் மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-250)




# அக்கராயனில் ஆணின் சடலம் மீட்பு

(குருமன்காடு)



அக்கராயன் பகுதியிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அக்கராயன பொலிஸார் தெரிவித்தனர்.

வீடொன்றின் சாமி அறையிலிருந்தே இவரது சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டதாக அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பொலிஸ் பிரிவிலுள்ள வன்னேரிக்குளம்-குஞ்சுக்குளம் கிராம வாசியான அறுபது வயதுடைய முருகேசு திருநாவுக்கரசு என்பவருடைய சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இவர் தனது மனைவியையும் ஐந்து பிள்ளைகளையும் பிரிந்து தனிமையில் வாழ்ந்தவரென்றும் இவர் வாய் பேச முடியாதவர் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அக்கராயன் பொலிஸார் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ம-250)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 84பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பு மற்றும் கடனீரேரிகளில் கடந்த ஜனவரி மாதம் முதல் இம்மாதம் வரையில் சட்டவிரோதமாக தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 84 பேர் முல்லை.மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கெதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் 54 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் 68பேர் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அவர்களுக்கு 3 இலட்சத்து 15ஆயிரம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் கைப்பற்றப்பட்ட வலைகள் நீதிமன்ற வளாகத்தில் எரியூட்டி அழிக்கப்பட்டன. ஆறு படகுகளும் 6 இயந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்டன.

இச்செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருவதும் தொடர்ந்தும் இச்சட்டவிரோத தொழிலில் ஈடுபடுவோருக்கு எதிராக எதிர்காலத்திலும் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் முல்லை. மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரன் தெரிவித்துள்ளார். (ம-267)

# விபத்தில் ஐவர் காயம்

(குருமன்காடு)




கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ் வண்டி ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் விபத்திற்குள்ளானதில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

மடு பரயனாலன்குளம் பகுதியில் குறித்த பஸ் வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதகு ஒன்றுடன் மோதி அருகிலுள்ள வாய்க்கால் பகுதியில் குடை சாய்ந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த பஸ் வண்டிச் சாரதி உட்பட்ட ஐவரும் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில், இவர்களில் இருவர் சிகிச்சை பெற்று திரும்பியுள்ளதாகவும் ஏனைய மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் முருங்கன் மாவட்ட வைத்திய அதிகாரி ஒஸ்மன் சாள்ஸ் தெரிவித்தார்.

மதவாச்சியைச் சேர்ந்த பஸ் வண்டிச் சாரதியான பியந்த காமினி (வயது 25), புத்தளத்தைச் சேர்ந்த எம்.ரி.எம்.ரவுப் (வயது 24), கே.ஜெயின்ஸ் (வயது 56) ஆகிய மூவருமே முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து தொடர்பான விரிவான விசாரணையை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

# 2012 /2013 ஆம் ஆண்டுகளுக்கான வருமானவரி

# கொடுப்பனவுகள் மற்றும் வரிவிபரத்திரட்டுக்கள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் வருமான வரிக்குரிய வரிமதிப்பாண்டு 2012/2013 ற்கான வருமான வரி விபரத்திரட்டுக்கள் அஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதன்படி 2012/2013 ஆம் ஆண்டுக்கான உரிய வருமானவரிக் கொடுப்பனவுகள் 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைய இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியதுடன் விபரத்திரட்டுக்கள் இவ்வாண்டு நவம்பர் 30ற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இவ்விபரத்திரட்டு பூர்த்தி செய்வதற்குரிய அறிவுறுத்தல்கள் அடங்கிய கையேடு வரிவிபரத்திரட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி பின்வரும் விடயங்களை வரி செலுத்துவோர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2012/2013 ஆண்டுக்கான வரியற்ற விடுதொகை தனிப்பட்ட ஊழிய வருமானம் தொடர்பில் 6 இலட்சம் ரூபாவாக வும், ஏனைய வருமானங்கள் தொடர்பில் 5 இலட்சம் ரூபாவாகவும் இருக்கும்.

ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதில் அல்லது ஏதேனும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகளுக்கு அவர் தனிப்பட்டவராக இருப்பினும் அல்லது கம்பனிகளாயினும் ஆகக்கூடிய வருமானவரி 10% ஆகும். பொருட்களை வாங்கி, விற்கும் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களுக்கோ அல்லது நிறுவன ரீதியற்ற முறையில் சேவை வழங்குநர்களுக்கோ இச்சலுகை வீதம் ஏற்புடையதல்ல.

6 இலட்சம் ரூபாவை விஞ்சும் பங்குடமை வியாபாரத்தைப் பொறுத்தவரையில் அதன் பகிர்வுக்குரிய இலாபங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீது 8% வருமானவரி ஏற்புடையதாகும். மேலும் இவ்வாறு செலுத்தப்பட்ட பங்குடமை வரித்தொகையானது பங்காளர்களின் சம்பளத்தையும், உள்ளடக்கிய இலாபநட்ட விகிதங்களுக்கேற்ப வரிவரவு (Tax credit) பங்காளர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.

கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் ஆயின் அதன் வரிவிதிக்கத்தக்க வருமானம் 50 இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதிருப்பின் 15% வருமான வரியும், ஏனைய கம்பனிகள் 28% இலும் வருமான வரியைச் செலுத்த வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்களும் (NGO) தமக்குக் கிடைத்த பெறுகைகளில் 3% இனை வரிவிதிக்கத்தக்க வருமானமாகக் கருதி அதன் மீது 28% வருமான வரியைச் செலுத்த வேண்டும். இதன்படி மொத்தப் பெறுகைகளில் செயற்பாட்டு வீதம் 0.84% (3% x 28%) எனக் கருதிக் கொள்ளலாம்.

ஏதேனும் களரிகள் (Clubs) அல்லது கழகங்கள் தமது வரிவிதிக்கத்தக்க வருமானம் மீது 10% வருமானவரியைச் செலுத்த வேண்டும்.

இவைதவிர வியாபார அல்லது வர்த்தக இலாபங்களை வெளிப்படுத்துவோர் வரி விபரத் திரட்டுடன் தமது இறுதிக் கணக்குக் கூற்றுக்களையும் இணைக்க வேண்டும். 2010 ஆம் ஆண்டிலிருந்து வியாபார மற்றும் வர்த்தக நிலையத்தில் ஒழுங்கான முறையில் கணக்குகளை பேணுவதன் முக்கியத்துவதை எமது திணைக்களம் வலியுறுத்தி வந்துள்ளது. அத்துடன் இது தொடர்பான கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை 5 வருடங்களுக்கு பாதுகாப்பாக பேணிவரவேண்டியமை வரிச் சட்டங்களின் கட்டாயமானதாகும்.

மேலும் இறுதிக் கணக்குக் கூற்றுக்கள் பெயரளவில் இல்லாது விரிவான முறையில் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வியாபார முயற்சிகளை நடத்துவோர் ஒவவொன்றுக்கும் வெவ்வேறான கணக் குக் கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டும். அவ்வாறு சாத்தியமில்லையெனில் ஒரே கணக்குக்கூற்றில் வெவ்வேறு வியாபார முயற்சிகளின் கொள்வனவு மற்றும் விற்பனைகளை வெவ்வேறாகக் காட்டுதல் அவசியமானதாகும்.

வியாபார முயற்சிகளை நடத்துவோர் வழமை போல் கணக்கறிக்கைகளை இணைக்காமல் உத்தேச வரிகளை மட்டும் செலுத்தி விபரத்திரட்டுக்களை சமர்ப்பிப்போர் விடயத்தில் திணைக்களம் மிகவும் கண்டிப்பாக இருக்கும். வரி விபரத்திரட்டுக்கள், கணக்குகளின்றி சமர்ப்பிக்கப்படுமிடத்து உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 163(3)(b) பிரிவுக்கமைய வருமானத்தை மதிப்பீடு செய்ய வே ண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

ஏற்கனவே காலாண்டு அடிப்படையில் சுயமதிப்பீட்டு முறையில் வருமான வரியைச் செலுத்தாதவர்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் உரிய வரியைச் செலுத்துவதன் மூலம் தாமதத்திற்கான தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தம்மை தவிர்த்துக்கொள்ள முடியும்.

பா.சிவாஜி
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
யாழ். பிராந்திய அலுவலகம்.

தனிப்பட்டவர்களின் வருமான வரி வீதம

| வரி விதிக்கத்தக்க வருமானம் (ரூபா) | வரி வீதம் |
|---|---|
| முதல் 500,000 | 4% |
| அடுத்த 500,000 | 8% |
| அடுத்த 500,000 | 12% |
| அடுத்த 500,000 | 16% |
| அடுத்த 1,000,000 | 20% |
| மீதி வரிவிதிக்கத்தக்க வருமானம் | 24% |


விழுதாக நிற்கும் என் வெற்றிக்கு விதையூன்றி நீருற்றிய எனதன்பு உறவுகளே!



அங்கஜன் இராமநாதன்

MBA (International) B.Eng (Hons)

எனது வெற்றிக்கு நானும் நீங்களும் கடந்து வந்த பாதைகள் கனதியானவை, கரடு முரடானவை என்னை ஒரு வெற்றியாளனாக்கிய உங்களுக்கு தெரியும், இந்த வெற்றி இலகுவாக அமைக்கப்பட்ட ஒன்றல்ல என்பது. நான் ஆரம்பம் முதலே சொல்லி வந்தது போல், மக்கள் சரியானவர்களை இனம்காணுவார்கள் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தியுள்ளீர்கள். இளைய சமுதாயத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையினை வெளிப்படுத்தியுள்ளீர்கள் உங்கள் வாக்குகளால் உங்கள் பிரதிநிதியாக்கிருக்கிறீர்கள். நாளைய சமூகத்தை நல்ல பாதையில் கொண்டு செல்ல வேண்டிய மிகப்பெரிய பொறுப்பைத் தந்திருக்கிறீர்கள். நீங்கள் என்னை விட கடுந்துயர் அடைந்தது தான் எனக்கு இந்த வெற்றியை அளித்திருக்கின்றீர்கள். உங்கள் துன்பங்களை நானும் நன்கறிந்தவன் பல முனைகளில் நான் எதிர் நீச்சல் போடுவதற்கு எனக்கு ஊக்கிகளாகவும், உந்துதல் சக்தியாகவும் இருந்து செயற்பட்டவர்கள் நீங்கள் உண்மையில் நீங்கள் ஒவ்வொருவரும் நல்ல பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள். இதில் நான் கற்றதும், கற்றுத் தெளிந்ததும் பல.. இதற்க்காக வெறுமனே நன்றி மட்டும் சொல்லி நீக்காமல் அதற்கு மேலாக உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமானவனாயிருந்து, கடந்த காலங்களை விடவும் அதிக நேரத்தை உங்களுக்கு ஒதுக்க வேண்டிய கடமை என்னிடம் வந்திருக்கிறது.

ஆயினும் நான் உங்கள் வழி நின்று எத்துனை இடர்கள் வரினும் அத்தனையும் தாண்டி உங்களுக்காக களம் காண்பேன். என்பதனை உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த சந்தர்ப்பத்தில் என் வெற்றிக்காக உழைத்த என்னினிய சகோதர்களை மறந்து விடமுடியாது. எத்தனை இடர்கள், தடைகள் வந்த போதிலும் அத்தனையும் எனக்காக தமதாக்கி என் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் காலத்தால் மறவாத நன்றி பல ... எனது வெற்றி அவர்களின் உழைப்புக்கு கிடைத்த வெகுமதி. எனது வெற்றி இளைஞர்களுக்கான வெற்றி, குறிப்பாக தம் சிரம் பாராமல் பணி செய்த சகோதரிகள் மறக்கப்பட முடியாதவர்கள். என்னுடைய வெற்றியை வேண்டுமானால் கட்சி வைத்துக்கொள்ளட்டும்.

நீங்கள் தந்த அங்கீகாரத்தை நான் வைத்திருக்கவே ஆசைப்படுகின்றேன் இந்த அங்கீகாரத்தை நேர்மையான அரசியல் பயணத்தின்க்காக நீங்கள் அமைத்து தந்த பாதையாகவே பார்க்கின்றேன். என்னுடைய வெற்றியை உறுதிப்படுத்துவதனை கடமையாக நினைத்து உங்கள் இனைவருக்கும் ன்றி. முகம் காட்டாமல் இருந்து எனக்காக உழைத்தவர்களுக்கும், என்னோடு நின்று தோழமையோடு செயற்பட்டவர்களுக்கும், நடுநிலமை காட்டிய வந்த ஊடக நண்பர்களுக்கும் உடல் உள வலிமையினை தந்து எம்மை ஆதரித்த எல்லாச் சொந்தங்களுக்கும் உணர்வு கலந்த நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படிக்கு
அன்றும், இன்றும், என்றும் உங்களினல் ஒருவன்
அங்கஜன் இராமநாதன்

(சி/4915)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

# 17.09.2013-17.10.2013




அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம்,
பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

**சனியை இராசிநாதனாகக் கொண்ட கும்ப இராசி அன்பர்களே! பாதிக்கும் குருவை பலப்படுத்துவது நல்லது!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் செவ்வாய் சனியைப் பார்க்கிறார். 6 ஆம் இடத்தில் இருக்கும் செவ்வாய் இராசிநாதன் சனியைப் பார்க்கும் பொழுது கூடுதல் கவனத்துடன் செயற்படவேண்டிய நேரமாகவே அமைகிறது. தாய் மற்றும் உடன்பிறப்புகள் வழியில் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். தற்சமயத்தில் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றால் வீண் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும். இராசிநாதனாக விளங்கும் சனி 12 ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்குவதால் பயணங்கள் அதிகரிக்கும்.

அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்குமா? என்பது சந்தேகம்தான். பிறருக்கு வாக்குக் கொடுப்பதற்கு முன் ஒருகணம் யோசிப்பது நல்லது. தொழில் ரீதியாக எந்த முடிவும் இப்பொழுது எடுக்க வேண்டாம். தொல்லை தந்த எதிரிகளின் பலம் கூடி இருக்கும் இந்த நேரத்தில் கூட்டாளிகளிடம் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. ஏட்டில் லாபம் என்று எழுதப்பட்டிருக்குமே தவிர எதிரில் லாபம் வந்து சேராது. எனவே, எந்த துறையைத் தேர்ந்தெடுத்தவராக இருந்தாலும் அந்தத் துறையில் கண்ணும் கருத்துமாக இருந்தால்தான் லாபத்தை கரங்களில் புரளவைக்க முடியும்.

பொதுவாக மாதத் தொடக்கத்தில் சப்தமாதிபதி சூரியன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். அதோடு புதனும் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். மறைந்த புதன் நிறைந்த தன லாபத்தைக்கொடுக்கும். மக்கள செல்வங்களால் மேன்மை கிட்டும். அதே நேரத்தில் கடகச் செவ்வாய் உங்கள் இராசியையும் பார்க்கிறார். இர்ராசிநாதனையும் பார்க்கிறார். எனவே, மிக, மிக கவனம் செலுத்த வேண்டிய நேரமாகவே இந்த நேரத்தைக் கருத வேண்டும். தடைகள் அதிகரிக்கும் தன வரவில்

## பாதிக்கும் குருவை பலப்படுத்துவது நல்லது!

குறுக்கீடுகள் இருக்கும். மடமடவெனப் பேசி மறுநாளே உதவி செய்வதாகச் சொன்னவர்கள் மனம் மாறுவர்.

அரசுவழிச் சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். அன்னியர்களிடம் நம்பிக் கொடுத்த பொறுப்புக்களில் ஆதாயம் குறைவாகவே இருக்கும். இப்படிப்பட்ட கிரக சூழ்நிலையில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிவது ஒன்றுதான் யோகம். உங்கள் இராசியையும் பார்க்கிறார். இராசிநாதனையும் பார்க்கிறார். எனவே, மேற்கண்ட பொதுப் பலன்கள் நடை, பெறுமா? என்று கவலைப்பட வேண்டாம். குருவின் பார்வையை பலப்படுத்தினால் கோடி நன்மைகளைப் பெறலாம். எனவே, அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய அருகில் உள்ள ஆலயம் சென்று ஆலமர் செல்வனை வழிபட்டு வாருங்கள். பெரியோர்களின் சான்றோர்களின் வாழ்த்துக்களை பெற்றுக் கொள்ளுங்கள். இதன்விளைவாக மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். சனிக்கிழமைவிரதமும் ஆஞ்சநேயர் வழிபாடும் சஞ்சலங்களைத் தீர்க்கும். காகவாகனத்தானையும் அங்காரகனையும் கைகூப்பித் தொழுதால் கவலையைப்போக்கும்.

**பொன்னான புதனின் சஞ்சாரம்!**

செப்டெம்பர் 22 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார் 5,8 க்கு அதிபதி 9 இல் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் அகலும். பஞ்சாயத்துக்கள நல்ல முடிவிற்கு வரும். சகோதரர்களில் ஒருசிலர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். ஒருசிலர் உங்கள் கருத்துக்கு ஒத்துவர மறுப்பர். மாமன், மைத்துனர் வழியில் நீண்ட நாட்களாக இருந்த கருத்து வேறுபாடுகள் இப்பொழுது அகலும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

**சுகம் தரும் சுக்ரப்பெயர்ச்சி!**

அக்டோபர் 3 ஆம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 4,9 க்கு அதிபதி 10 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் தொழில் வளர்ச்சி மேலோங்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ள விரும்புபவர்கள் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 8 ஆம் திகதி சிம்ம இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக ஒரு சில நல்ல மாற்றங்களும் உங்களுக்கு வந்து சேரும். 10 க்கு அதிபதி 7 இல் சஞ்சரிக்கும் பொழுது வாழக்கைத் துணைக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும். சகோதர வர்க்கத்தால் ஒரு கூட்டுத் தொழில் உருவாகலாம். இடம், பூமியால் எதிர்பார்த்தபடியே லாபம் கிடைக்கும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம். சூரியன் வீட்டில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது கோபத்தின் காரணமாக சில நல்ல வாய்ப்புக்களைக் கைநழுவவிடுவீர்கள். பொதுவாகவே இம்மாதம் முழுவதும் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதியைக் காண இயலும். இம்மாதம் சனீஸ்வர வழிபாட்டையும் செவ்வாய் வழிபாட்டையும் மேற்கொண்டால் சந்தோஷம் கூடும்.

சிவல்புரி சிங்காரம்




பூரட்டாதி 4 ஆம் பாதம்,
உத்திரட்டாதி, ரேவதி

**வியாழனை இராசிநாதனாகக் கொண்ட மீன இராசி அன்பர்களே! தெய்வ வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய மாதம்!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உள்ள படியே அஷ்டமத்து சனியின் ஆதிக்கம் இருக்கிறது. அதோடு இப்பொழுது செவ்வாயின் பார்வையும் சனியின் மீது பதிகிறது. எனவே தடைகளும் தாமதங்களும் அதிகரிக் கலாம். தக்க சமயத்தில் உதவி செய்வதாக சொன்னவர்கள் கையை விரிக்கலாம்.

இடையூறு சக்திகள் எத்தனை வந்தாலும் அதை இலகுவாகத் தீர்த்து வைப்பது இறைவழிபாடுதான் என்பதை அறிந்து வைத்திருப்பீர்கள். அந்த அடிப்படையில் சனியைத் தொடர்ந்து வழிபட்டு வரும் நீங்கள் இனி செவ்வாய் வழிபாட்டையும் மேற்கொள்ள வேண்டும். பொதுவாக

## தெய்வ வழிபாடுகளால் திருப்தி காணவேண்டிய மாதம்!

இரண்டு கிரகங்களுக்கும் உரிய தெய்வங்களாக விளங்கும் முருகப்பெருமானையும், ஆஞ்சநேயர் உடனான விஷ்ணுவையும், லட்சுமியையும் விடாது வழிபட்டு வந்தால் தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். தகராறு செய்தவர்கள் தானாக சமரசத்திற்கு வந்து சேருவர்.

மாதத் தொடக்கத்தில் 2 இல் கேது 8 இல் ராகு இருக்கிறார். 6 க்கு அதிபதி சூரியன் 7 இல் சஞ்சரிக்கிறார். எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகிய மூன்றுக்கும் ஆதிபத்யமாக விளங்கும் சூரியன் உங்கள் இராசியைப் பார்ப்பதால் அவை மூன்றாலும் தொல்லைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

எனவே, எதிரிகளை அனுசரித்துச் சென்றால் இதயத்தில் அமைதிகூடும். நோய் நொடிகளுக்கான அறிகுறிகள் தோன்றும் பொழுது மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதன் மூலமே உற்சாகத்துடன் பணிபுரிய இயலும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

வரவிற்கேற்ற செலவு செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். சங்கிலித் தொடர் போல் கடன் வாங்குவதன் மூலம் நீங்கள் சங்கடங்களை சந்திக்க நேரிடும். எனவே, நீங்கள் வரவறிந்து செலவு செய்யுங்கள். அப்பொழுது தான் வருமானத்திற்கு ஏற்ற விதத்தில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும். மன நிம்மதியையும் தக்க வைத்துக்கொள்ளலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

செப்டொம்பர் 23 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரலாம். பொன், பொருட்கள் வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளில் முன் நின்று கலந்து கொள்வீர்கள். கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டும் வாய்ப்புக்களை கைநழுவ விடாதீர்கள்.

**சுகம் தரும் சுக்ரப்பெயர்ச்சி!**

அக்டோபர் 3 ஆம் திகததி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் 9 இல் சஞ்சரிக்கும்பொழுது சகோதர வழியில் சச்சரவுகள் அகலும். முன்னோர்வழிச் சொத்துக்களில் முறையான பாகப்பிரிவினைகள் நடைபெறும். அந்நியதேச அனுகூலம் உண்டு. இளைய சகோதர வர்க்கம் இணக்கமாகும். பிணக்குகள் தீர்ந்து பிரியம் கூடும். இந்த நேரம் தாய் தந்தையர்களின் ஒத்துழைப்பும் தக்க விதத்தில் கிடைக்கும்.

**சிம்மச் செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 8 ஆம் திகதி சிம்ம இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை விரய ஸ்தானத்தில் பதிகிறது. எனவே, சொத்துக்கள் வாங்க, விற்க உகந்த நேரமாக இதைக் கருதலாம். சொத்து விற்பனை மூலம் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு புதிய தொழில் முயற்சிகளை தொடங்க நினைப்பவர்கள் குடும்ப உறுப்பினர்களின் ஜாதகங்களை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. சனியின் ஆதிக்கத்தால் பாதிப்பு இல்லாதவர்களின் பெயரில் தொழில் தொடங்குவது நல்லது. இம்மாதம் இனிய மாதமாக அமைய குரு, செவ்வாய், சனி ஆகிய மூன்றின் வழிபாடும் உங்களுக்குத் தேவை.

(முற்றும்)

# திருவண்ணாமலையில் கோபூஜை ஆரம்பம்



ஆன்மீகம் 125

...அவர் பசுவை வாங்கி கட்டி வைக்க அடியேனும் கமிஷனர் திரு.வி.ராமதாஸ் ஐ.ஏ.எஸ் அவர்களும் முதன் முதலில் கற்பூர ஆராத்தி எடுத்து 1990 ல் கோபூஜை ஆரம்பித்து வைத்தோம்.

அந்த மாதம் 51 நாட்களுக்கு வேண்டிய சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் விநியோகிப்பதை அடியேன் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன். விடாமல் உள்ளன்புடன் செயல் வீரர் திரு.சுந்தரம் அய்யா அவர்கள் காலையில் கோ பூஜை செய்ததும் ஆலய கதவு திறக்கப்பட்டு இன்று எத்தனையோ பசுக்கள் பெருகி எம்பெருமானுக்கு சதாபால் அபிஷேகம் நடக்கிறது.

அப்போது அக்கோயிலுக்கு 15 லட்சம் கடன் இருந்தது. திரு.ப.சிவக்குமார் இணை ஆணையர் நிர்வாக அதிகாரியாய் இருக்கும்போது கோ பூஜை செய்து அங்கு இருக்கும் சாதுக்களுக்கு பிரசாதம் கொடுத்தோம். அப்போது அவர் கோபூஜை மகிமையால் இன்று ஆலயத்திற்கு இலட்சக்கணக்கான வருமானம் வருகிறது என்று கூறி பல கோடி மக்கள் வரக்கூடிய சக்தியும் பசு பூஜைக்கு உண்டு என்றும் கூறினார். இதனைக் கேள்விப்பட்ட பிரம்மஞானி யோகிராம் சூரத்குமார் கமிஷனர் தங்கி இருக்கும் இடத்திற்கு கோயில் மனேஜர் இந்திரஜித்தால் அழைத்துவரப்பட்டார்.

அதற்கு முன்னால் கோயில் குளத்திலிருக்கும் மீன்களை ஏலம் போடுவதாய் கேள்விப்பட்டேன். அது கொடிய



சித்தர் சுவாமியும் ரமணி குருஜியும் கோ பூஜையில்

பாவம் என்றேன். அப்போது அக்டோபர் 2 ஆம் திகதி காந்தி ஜெயந்தி அன்று எல்லா ஆலய குளத்திலும் மீன் பிடிக்கக் கூடாது என்று கமிஷனர் வி.ராமதாஸ் ஐ.ஏ.எஸ் உத்தரவு பிறப்பித்தார்.

யோகிராம் சூரக்குமார் இதற்கு நன்றி கூறி ஏக சந்தோசத்தில்- பல உயிர்களைக் காத்ததற்கு நடனமாடி மகிழ்ச்சி தெரிவித்தார்.

அடியேன் குருவழி ஞானத்தால் சித்த வைத்தியம் செய்வதால் சஞ்சீவி தைலம் வைத்திருந்தேன். அதனை எடுத்து கமிஷனரிடம் கொடுக்க அவர் அதை சுவாமிகளிடம் கொடுத்து எல்லா வலிகளையும் போக்க வல்லது என்று கூறி என்னை அறிமுகப் படுத்தினார்.

அன்று யோகி ராம்சூரத் குமார் சுவாமிகள் அனைத்து ஆசிகள் கூறியது மட்டுமன்றி எங்களுடன் சந்தோஷமாக காலை உணவு சாப்பிட்டார். இப்படி திருவண்ணாமலைக்குப் போகும் போது அடிக்கடி சுவாமிகள் வருவதுண்டு.

இன்று திருவண்ணாமலை மீது இருக்கும் ஸ்ரீலஸ்ரீ நாராயண சுவாமிகள், கோயில் மேற்கு கோபுர வாசலில் திண்ணையில் இருப்பார். கமிஷனரை அவரிடம் அழைத்துப் போய் ஆசிகள் பெற்றுத் தந்தேன். திருவண்ணாமலை மேல் இருக்கும் பிரம்மதீர்தத்தில் இருக்கும் பெண் தேவதை என்னை அடிக்கடி கூப்பிடும். அடியேன் உடனே புறப்பட்டு போய் விடுவேன்.

பிடாரி அம்மன்கோயில் மிகவும் சக்தி வாய்ந்தது. உண்ணாமலை அம்மன் பேசும் தெய்வம். எனக்குப் பல விடயங்களைக் கூறியுள்ளது. நான் திருவண்ணாமலை செல்லும் போதெல்லாம் பசுமடத்தில் சர்க்கரை பொங்கல் செய்து மகா சித்தர்களுக்கு அரோகரா சொல்லி சாதுக்களுக்குப் பிரசாதமும் தட்சினையும் அண்ணாமலைக்கு அரோகரா என்று வணங்கிவிட்டு வந்துவிடுவேன். எந்த தெய்வீக சக்தி பூலோகத்தில் வந்தாலும் சாதுக்கள் வழியாகத்தான் மனிதனுக்கு நன்மை கிடைக்க வழிசெய்ய முடியும். (தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# இருண்ட வானத்தில் ஒரு மூலையில் சிறிய வெளிச்சம்!

**வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் இலங்கை அராஜக அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் தீர்ப்பு. ஆனால், மாகாணசபை ஈழத்தமிழர்களுக்கு தீர்வைத் தராது, தீர்வுக்காக தொடர்ந்து முயல்வது அவசியம் என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

"இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை ஈவு இரக்கமின்றி இனப்படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இனப் படுகொலை குற்றத்தை மறைப்பதற்காகவும் அனைத்துலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூதுவதற்காகவும் தமிழருக்கான நீதியைக் குழிதோண்டிப் புதைப்பதற்கு பொதுநலவாய மாநாட்டை கொழும்பில் நடத்துவதற்காகவும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தியது.

இதுவும் இந்தியாவின் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுடன் இலங்கை அரசு வகுத்த சதித்திட்டமே ஆகும்.

தந்தை செல்வா காலத்தில் சிங்கள அரசு அறிவித்த மாகாணக் கவுன்சில் அதிகாரங்களோ அதிபர் ஜெயவர்த்தன காலத்தில் மீண்டும் அறிவிக்கப்பட்ட மாவட்டக் கவுன்சில் அதிகாரங்களோ கூட இப்போது மாகாண சபைகள் மூலம் கிடைக்காது.

13-வது அரசியல் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றுவதாக 1987 நவம்பரில் அறிவித்து 1988 ஆம் ஆண்டு வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைத்து இந்திய இராணுவத்தின் உதவியோடு 8 சதவீத மக்கள் வாக்களித்த ஒரு போலியான தேர்தலை நடத்தி ராஜீவ் காந்தி அரசின் கைக்கூலியான வரதராஜபெருமாளை முதல்வராக்கி நடத்திய நாடகத்தின் இறுதிக் காட்சியாக 1990 மார்ச் 1 இல் மாகாண சபையால் எந்தப் பயனும் இல்லை என்று வரதராஜ பெருமாள் அறிவித்துவிட்டு ஓடிப்போனார்.

தங்கள் தாயக விடுதலைக்காக ஈழத் தமிழர்கள் மானத்தோடும் உரிமையோடும் வாழ்வதற்காக தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் பிரகடனம் செய்த சுதந்திரத் தமிழ் ஈழத்தைக் கட்டி எழுப்ப உலகம் இதுவரை கண்டும் கேட்டும் இராத வீரப்போர் புரிந்து- மகத்தான தியாகம் செய்து தமித் தேசியத் தலைவர் அவர்களின் தலைமையிலான தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தமிழ் ஈழ அரசை அமைத்தனர்.

உலகம் அதை அங்கீகரிக்கும் நிலை நெருங்கியபோது இந்திய அரசு பலகோடிக்கணக்கான பணத்தையும் முப்படைத் தளவாடங்களையும் இலங்கை அரசுக்குத் தந்து யுத்தத்தை இயக்கி விடுதலைப்புலிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியது.

ஒரு கோர மான, இனப்படுகொலை நடந்த உண்மையை உலகம் அறியும் விதத்தில் சனல்-4 தொலைக்காட்சி ஒளிப்படங்களும் ஐ.நா.வின் மூவர் குழு அறிக்கையும் வெளிப்படுத்திய சூழலில் இனப்படுகொலையின் கூட்டுக் குற்றவாளியான இந்தியாவின் காங்கிரஸ் அரசும் இலங்கை அரசும் திட்டமிட்டுச் செய்கின்ற சதியின் ஏற்பாடுதான் கொழும்பில் பொதுநலவாய மாநாடு ஆகும்.

புண்ணுக்குப் புனுகு பூசுவதுபோல வடக்கு மாகாணத்தில் இலங்கை அரசு தேர்தலை நடத்தி உள்ளது. முன்பு கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தி இலங்கை அரசின் ஏஜெண்டுகளை அதிகாரப் பொறுப்பில் அமர வைத்து மோசடி வேலை செய்தது. கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. மாறாக அங்கு வாழும் முஸ்லிம் மக்களுக்கும் இலங்கை அரசு கேடு செய்தது.

13-வது சட்டத்திருத்தம் என்பது ஈழத்தமிழர்களுக்கு எந்த நீதியும் வழங்காத ஏமாற்றுத் திட்டம் ஆகும். அதனை அப்போதே ஈழத் தமிழ் மக்கள் முற்றிலுமாக நிராகரித்தனர்.

இப்போது 13-வது திருத்தத்தையும் மேலும் நீர்த்துப் போகச் செய்து தமிழர் தாயகத்தின் நிலம் உள்நாட்டுப் பாதுகாப்புக்கான காவற்றுறை குறித்த சொற்பமான அதிகாரங்களையும் இலங்கை அரசு பறிக்க திட்டமிட்டுவிட்டது. அதனை மஹிந்த ராஜபக்ச குழு அறிவித்தும் விட்டது.

எனினும் இருண்ட வானத்தின் ஒரு மூலையில் சிறிய வெளிச்சம் தெரிவது போல மாகாணசபை தேர்தல் முடிவுகள் ஈழத்தமிழ் மக்களின் மனநிலையை, எண்ண ஓட்டத்தைப் பிரதிபலிக்கின்றன.



வடக்குமாகாணத்தில் தமிழர்களின் மறுவாழ்வுகாக இலங்கை அரசு செயற்படுவதாக அரசாங்கம் செய்த பிரச்சாரத்தையும் இராணுவம் பொலிஸ் மற்றும் வன்முறையாளர்களைக்கொண்டு ஏவிய அடக்குமுறை அச்சுறுத்தலையும் மீறி ஈழத்தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குகள் இலங்கை அரசுக்கு எதிரான வாக்குகளே ஆகும்.

அயர்லாந்து விடுதலைப் போராட்டத்தில் ஒரு கட்டத்தில் இங்கிலாந்து அரசருக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டு தேர்தலில் வெற்றிபெற்று பின்னர் சரியான சந்தர்ப்பத்தில் சுதந்திர அயர்லாந்தை டிவேலாராவும் சின்பென் இயக்கமும் பிரகடனம் செய்தது போல அத்தகைய வரலாறு தமிழ் ஈழத்திலும் மீண்டும் திரும்பும் என்பதுதான் காலத்தின் தீர்ப்பாக இருக்கும்.

தமிழ் ஈழ மக்கள் சிங்களவர்களுக்கு அடிமைப்பட்டு வாழ்வதற்கு ஒருகாலும் ஒப்பமாட்டார்கள் என்பதால் தமிழர் தாயகத்தில் இருந்து சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்படவும் சிங்கள இராணுவமும் பொலிசும் முற்றாக வெளியேற்றப்படவும் சிங்களச் சிறைகளில் வாடுகிற ஈழத்தமிழர்கள் அனைவரும் விடுவிக்கப்படவும் உலகின் பல நாடுகளில் விடுதலைக்காக நடத்தப்பட்டதுபோல சுதந்திர தமிழ் ஈழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்படவும் அந்த வாக்கெடுப்பில் உலகின் பல நாடுகளிலும் வாழும் புலம்பெயர் ஈழத் தமிழர்கள் அந்தந்த நாடுகளிலேயே வாக்குப்பதிவில் பங்கேற்கவுமான நிலையை அனைத்துலக நாடுகளும் ஐ.நா. மன்றமும் மனித உரிமை ஆணையமும் உருவாக்கித் தரவேண்டும். அந்த இலக்கை அடையும் குறிக்கோளோடு தாய்த் தமிழகத்திலே உள்ள தமிழர்களும் உலகெங்கும் உள்ள தமிழர்களும் உறுதி எடுத்துக்கொள்வோம்". இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

# அநாவசியமாக மாத்திரைகளை பயன்படுத்துவதை தவிருங்கள்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகளை அநாவசியமான முறையில் பயன்படுத்துவதை நோயாளர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.**

நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகள் இந்நாட்டில் அநாவசியமான முறையில் பயன்படுத்தப்படுத்தப்படுவது அதிகரித்துள்ளதால் பல நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் நுண்ணுயிர்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகளை அநாசியமான முறையில் நோயாளர்களுக்கு சிபாரிசு செய்ய வேண்டாம் என மருத்துவ அதிகாரிகளிடமும் இவ்வகை மாத்திரைகளை நோயாளர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக விநியோகிக்க வேண்டாமென மருந்தாளர்களிடமும் மருந்தகங்களிடமும் சுகாதார அமைச்சு வேண்டுகோள்விடுத்துள்ளது.

நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகள் நோயாளர்களுக்கென அநாவசியமான முறையில் சிபாரிசு செய்யப்படுவதும் விநியோகிக்கப்படுவதும் கண்டறியப்படுமாயின், அந்நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய மருந்துப் பொருள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரகம தெரிவித்துள்ளார்.

நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தவென கடந்த 30 வருடகால பகுதியில் புதிதாக எந்தவொரு மாத்திரையுமே உற்பத்தி செய்யப்படவுமில்லை. அவ்வாறான மாத்திரைக்கான ஆராய்ச்சிகளும் இடம்பெறாதுள்ளன. ஏனெனில் அது அதிக செலவை ஏற்படுத்தக் கூடியது.

இதன் காரணத்தினால் தற்போதுள்ள நுண்ணுயிர்த் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகளை உரிய முறையில் பயன்படுத்தி பாதுகாப்பதற்குத் தவறினால், அடுத்து வரும் 20-30 வருடங்களில் எமது எதிர்கால சந்ததியினர் மிக மோசமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதைத் தவிர்க்க முடியாது போய்விடும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இம் மாத்திரைகள் அநாவசியமான முறையில் பயன்படுத்தப்படும் போது, அவை நோய்க்கிருமிகளுக்கு இசைவாக்கமாகிவிடும். அதனால் நோய்களுக்கான எதிர்ப்பு சக்தியில் பயனளிக்கமுடியாத நிலையும் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-7)



வெளிநாட்டு படையினருடன் இலங்கை படையினர் கிழக்கில் போர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, சல்லித்தீவு ஆகிய பிரதேசங்களில் இந்த கூட்டு போர்ப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. படைவீரர்கள் பயிற்சியில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

# எதிர்க்கட்சி தலைவருடன் விவாதிக்க வாருங்கள்

## ஜனாதிபதியை அழைக்கிறார் அசாத் சாலி

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு அரசாங்கம் அஞ்சுவதாகவும் முடிந்தால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் விவாதம் ஒன்றுக்கு வருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விடுப்பதாக மத்திய மாகாணத்திற்கு தெரிவாகியுள்ள அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தல் மூலம் அரசாங்கம், மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறவில்லை. இலக்கத் தகடுகள் இல்லாத பல வாகனங்கள் கண்டியில் சுற்றித் திரிந்தன. ஆனால், அவற்றுக்கு எதிராக சட்டம் செயற்படுத்தப்படவில்லை.

பொலிஸ்மா அதிபரும், தேர்தல் ஆணையாளரும் வேலை தெரியாத நிலைமைக்கு ஆளாகியுள்ளனர். அரச ஊடகங் கள் பக்கச்சார்பாக நடந்து கொண் டன.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளை கவர்ந்து சரத்பொன்சேகா மூன்றாமிடத்திற்கு வந்துள்ளார். ரணில் விக்ரமசிங்கவுடன் சரத்பொன்சேகாவுக்கு போட்டியிட முடியாது. 2005 ஆம் ஆண்டில் ரணில் விக்ரமசிங்க பெற்ற வாக்குகளை கூட 2010 ஆம் ஆண்டு தேர்தலில் சரத்பொன்சேகாவினால் பெறமுடியாது போனது.

2010 ஆம் ஆண்டு சரத்பொன்சேகாவை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்தது ஐக்கிய தேசியக்கட்சி செய்த தவறு. அதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாணத்திற்கு சென்று பொய்களை கூறி அங்குள்ள முஸ்லிம்களை ஏமாற்றி மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டது போல இம் முறையும் அரசாங்கத்துடன் இணைந்தே செயற்படுவார் என தெரிவித்தார். (அ-7)

# நவநீதம்பிள்ளையின் கடிதம் கிடைக்கவில்லை

## வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைதான் தெரிவித்ததாகக் கூறி பொய்யானமுறையில் வெளியிடப்பட்ட கருத்துக்களை திருத்திக் கொள்ளுமாறு இலங்கை அரசைக் கேட்டுள்ளமை தொடர்பான கடிதம் இன்னமும் வெளிவிவகார அமைச்சினை வந்தடையவில்லை என அந்த அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

நவிப்பிள்ளை அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள சிங்கள அரசியல் தலைவரான டி.எஸ். சேனநாயக்கவின் சிலையை அங்கிருந்து அகற்றுமாறு அரச தலைவரைக் கேட்டிருந்தார் என செய்திகள் வெளிவந்திருந்தன.

இதனை மறுத்திருந்த நவிபிள்ளை, இலங்கை அரசு தன்மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருவதாக கூறியிருந்தார்.

உண்மைக்கு மாறான இவ்வாறான கருத்துக்களை உடனடியாக இலங்கை அரசு திருத்திக் கொள்ள வேண்டுமென்று நவிபிள்ளையின் அலுவலகம் இலங்கை அரசைக் கேட்டிருந்தது.

ஆனால், இதுதொடர்பான வேண்டுகோளைக் கொண்ட் கடிதம் தமது அமைச்சை இன்னமும் வந்தடையவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-7)

# சீமெந்து தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன

(கொழும்பு)

சீமெந்து அரைத்தல் மற்றும் பொதியிடுதல் ஆகியவற்றுக்கான தொழிற்சாலைகளை புதிதாக நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் புதிதாக நிறுவப்பட்ட மற்றும் ஏற்கனவே உள்ள துறைமுகங்களுக்கருகில் உத்தேச புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலுள்ள துறைமுகங்களுக்கருகாமையில் இச்சீமெந்து தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

துறைமுக மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய ஒரு துறைமுகத்துக்கு ஒரு சீமெந்து தொழிற்சாலை என்ற அடிப்படையில் இந்த தொழிற்சாலைகள் நிறுவப்படவிருக்கின்றன.

இலங்கையிலுள்ள அனைத்து துறைமுகங்களிலும் தொழிற்சாலை நிறுவுவதற்கான அமைவிடங்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை திட்டமிடல் துறைமுக அதிகார சபை முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையிலுள்ள துறைமுகங்களுக்கருகாமையில் சீமெந்து தொழிற்சாலைகள் அமைப்பதற்கான இடங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான அனுமதி அண்மையில் அமைச்சரவையினால் வழங்கப்பட்டது.

வர்த்தக துறைமுகங்களுக்கருகாமையில் இத்தகைய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் பொதுவானது. இவ்வாறு தொழிற்சாலைகளை துறைமுகங்களுக்கருகாமையில் அமைப்பதனூடாக பாரிய இயந்திரங்கள், பொருட்களை கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவு மட்டுப்படுத்தப்படுகிறது.

அதனால் சந்தையில் நிலவும் போட்டி விலைக்கே பொருட்களை விற்க முடியும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. (அ-7)

# தங்கத்தை விழுங்கி கடத்த முயன்ற 7 பேர் கைதாகினர்

(கொழும்பு)

சுமார் 25 இற்கும் மேற்பட்ட தங்கக் கட்டித் துண்டுகளை விழுங்கிய வண்ணம் சென்னைக்கு புறப்படவிருந்த 6 இந்தியர்களும் ஒரு இலங்கையரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி 7 பேரும் ஜெட் எயார் வேய்ஸ் விமானம் மூலம் சென்னைக்கு புறப்படுவதற்காக வந்த போது கடந்த திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி 7 பேர் தொடர்பாக சந்தேகம் ஏற்படவே அவர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஸ்கான் செய்யப்பட்டனர்.

சுங்க அதிகாரி சரத்நோனிஸ் தலைமையிலான குழுவினர் இவர்களை மீண்டும் விமான நிலையத்துக்கு அழைத்து வந்து உணவு, நீர் வழங்கி கண்காணித்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் ஒரு பயணி மட்டும் தனது வயிற்றிலிருந்து 4 துண்டு தங்கக் கட்டிகளை வெளியில் எடுத்து சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

ஏனையோர் கண்காணிப்பில் உள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். தங்கத்தின் பெறுமதி குறித்த மதிப்பீடு நேற்று வெளியிடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-7)

# இலங்கை பிரஜைகள் 49 பேர் மலேசியாவில் கைதாகினர்

இலங்கை பிரஜைகள் உட்பட 66 சட்ட விரோத குடியேற்றவாசிகள் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலேசியா குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மேற் கொண்ட தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 49 பேர் இலங்கை பிரஜைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மலேசியாவின் ஜலான் சுல்தானா பகுதியில் ட்ரக் வண்டி ஒன்றில் மறைந்திருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத குடியேற்ற வாசிகள் மலேசியாவுக்கு வருவதைத் தடுக்க அந்நாட்டு அர சாங்கம் விசேட வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. இதனடிப்படையிலே இந்த வெளிநாட்டவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மலேசியாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ் தானிகராலயத்தில் பதிவு செய்து கொண்ட சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை பிரஜைகள் மலேசியாவில் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-7)

# வடக்கு தேர்தல் அறிக்கை கமலேஷ் சர்மாவிடம்

வடக்கு மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாக பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் முதற்கட்ட அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அடுத்த சில தினங்களில் இந்த அறிக்கை பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை அவர்கள் மேற்கொண்ட கண்காணிப்பு விடயங்களை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மூன்று பிரதான நிபந்தனைகளைக் கொண்டுள்ள இந்த அறிக்கை பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர் குழுவிற்கு தலைமை தாங்கிய கென்யாவின் முன்னாள் உப ஜனாதிபதி ஸ்டோபான் கலங்சோ மயூசுகோவினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் அங்குள்ள 5 மாவட்டங்களில் 67.52 வீத வாக்குகள் பதிவானமை ஜனநாயக நடவடிக்கை என கண்காணிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

அத்துடன் வாக்களிப்பதற்காக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வசதிகள் தொடர்பில் திருப்தியடைய முடியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதேவேளை அரசியல் நடவடிக்கைகளுக்காக சில கட்சிகளுக்கு பாதுகாப்பு தரப்பினரின் உதவிகள் கிடைத்துள்ளதாகவும் இது தொடர்பில் தாம் அதிருப்தியடைந்துள்ளதாகவும் கண்காணிப்பாளர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். (அ-7)

# வடக்கில் பதவிப் பிரமாணம் யார் முன்னிலையில்?

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண சபைத்தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவ்வாறு பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்கள் என்பது பற்றிய தகவல் இதுவரையில் வெளியிடப்படவில்லை.


வடமாகாண சபையின் முதலமைச்சராக விக்னேஸ்வரனும் ஏனைய 29 உறுப்பினர்களும் யார் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார்கள் என்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

பதவிப் பிரமாணம் கட்டாயமாக ஜனாதிபதி அல்லது ஆளுநர் முன்னிலையில் செய்யவேண்டிய சட்டத்தேவைகள் கிடையாது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரனை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

சட்டத்தின் அடிப்படையிலேயே பதவிப் பிரமாண நிகழ்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் சமாதான நீதவான் ஒருவரின் முன்னிலையில்கூட பதவிப் பிரமாணம் செய்து கொள்ளமுடியும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேவையேற்பட்டால் கட்சித் தலைவர் சம்பந்தனின் முன்னிலையில்கூட பதவிப் பிரமாணம் செய்து கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடமாகாண சபையின் முதலமைச்சராக த.தே.கூட்டமைப்பு விக்னேஸ்வரனை ஏகமனதாக தெரிவு செய்துள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)



தாவடியூர் மு.நித்தியின் பல்தேர்வு வினாக்கள் என்ற நூல் அண்மையில் வெளியிடப்பட்டது. கிளி/பரந்தன் இந்து ம.வி.ஆசிரியர் தமிழ் சொல்லருவி ச.நவநீதன் வெளியிட்டு வைப்பதையும் திரு.சரவணபவன் தம்பதியினர் முதற்பிரதியை பெறுவதையும் நூலாசிரியர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# விவாகரத்து வழக்குகளுக்கு விரைவில் தீர்ப்பு வழங்குக

## பிரதம நீதியரசர் கோரிக்கை

(கொழும்பு)

விவாகரத்து தொடர்பான வழக்கு விசாரணைகளை விரைவில் முடித்து தீர்ப்புகளை வழங்க வேண்டும் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விவாகரத்து உள்ளிட்ட குடும்ப விவகாரங்களை விசாரிக்கும் நீதிமன்றத்தை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் இலக்கம் 7 மண்டபத்தில் திறந்து வைத்து உரையாற்றி போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்திற்கு அரசாங்கம் மக்களின் பணத்தை செலவிடுகிறது. இதனால் மக்களின் பணத்தை பயன்படுத்தி மக்களுக்கு கூடிய நிவாரணங்களை வழங்கவேண்டும்.

விவாகரத்து வழக்குகளை விசாரிக்க நீண்டகாலம் செல்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. இதனால் அப்படியான வழக்குகளை விரைவில் விசாரித்து தீர்ப்புகளை வழங்க வேண்டும்.

சமூகத்தில் குடும்பம் என்பது விலைமதிக்க முடியாத கூட்டுறவு. அந்த குடும்பம் பிளவுபட்டு செல்வதில் நான் மகிழ்ச்சியடைய மாட்டேன்.

இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமையை மனங்கொண்டே விவாகரத்துப்பெற நீதிமன்றத்திற்கு வருபவர்களுக்கு விரைவில் அதற்கான தீர்ப்புகளை வழங்க வேண்டியது மிகவும் முக்கியமானது என்றார். (அ-7)

# இலங்கையிலுள்ள மீனவர்களை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

## ஜெயலலிதா அழைப்பு

இலங்கை சிறையில் வாடும் காரைக்கால் மீனவர்களை உடனடியாக விடுவிக்க மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி புதுச்சேரி மாநில அ.தி.மு.க. சார்பில் இன்று 26 ஆம் திகதி காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

மீன்பிடித் தொழில் உணவு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிப்பதுடன் மீனவ மக்களின் வாழ்வாதாரம், கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்குதல், அந்நியச் செலாவணியை ஈட்டித் தருதல் ஆகியவற்றிலும் பெரும்பங்கை வகிக்கிறது.

இத்தகைய இன்றியமையா தன்மை வாய்ந்த தொழிலை மேற்கொள்ளும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது, கைது செய்யப்படுவது, சிறைபிடிக்கப்படுவது என்பன வாடிக்கையாகிவிட்டது.

இது மட்டுமல்லாது நீண்ட காலமாக படகுகள் பராமரிப்பு இல்லாது இலங்கை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதன் மூலம் இப்படகுகள் மீளவும் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள பயனற்றதான நிலையும் ஏற்படும்.

அண்மைக் காலமாக இந்திய மீனவர்கள் விடயத்தில் புதிய முறையை இலங்கை அரசு கையாண்டு வருகின்றது. அதாவது இந்திய மீனவர்களை விடுதலை செய்துவிட்டு அவர்கள் வசம் இருக்கும் படகுகள், வலைகள் ஆகியவற்றை அரசு பறிமுதல் செய்து விடுகிறது. இதன்மூலம் இந்திய மீனவர்களின் மீன்பிடித் தொழிலையே தடுத்துவிடலாம் என்று இலங்கை அரசாங்கம் கருதுகிறதோ என்ற எண்ணம் மீனவ மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்திய மீனவர்களுக்கு எதிரான இலங்கை அரசின் இந்த நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையில் இந்திய தூதரகத்தின் மூலம் மத்திய அரசு உறுதியான நடவடிக்கையை எடுக்குமேயானால் இந்திய மீனவர்களை குற்றவாளிகள் போல் நடத்தும் செயற்பாடு தடுக்கப்படுவதோடு இந்திய மீனவர்களையும் அவர்களுடைய படகுகளையும் உடனடியாக திருப்பித் தரக் கூடிய நிலையும் ஏற்படும். ஆயினும் இதுபோன்ற உறுதியான நடவடிக்கையை மத்திய அரசு எடுப்பதாக தெரியவில்லை.

இதன் காரணமாக புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 16 இந்திய மீனவர்கள் இன்னமும் இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலை செய்யப்பட்ட 13 மீனவர்களின் படகுகள் இன்னமும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. இது குறித்து பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுக்காதிருப்பது மிகுந்த மன வேதனையை அளிக்கிறது.

எனவே, இந்தப் பிரச்சினையில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடிக்கும் மத்திய , மாநில அரசுகளைக் கண்டித்தும் இலங்கை சிறையில் 50 நாட்களுக்கும் மேலாக வாடிக் கொண்டிருக்கும் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 16 மீனவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும் முன்னதாகவே விடுவிக்கப்பட்ட 13 மீனவர்களின் படகுகளைத் திரும்ப ஒப்படைக்கவும் தேவையான தூதரக நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறு மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தியும் அ.தி.மு.க. புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டக் கழகத்தின் சார்பில் இன்று காலை 10.30 மணி அளவில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

(கொழும்பு)

இலங்கை ஆயுர்வேத மருந்துவ சேவையிலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு கொழும்பில் நடத்தப்படவுள்ள வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைக்கு ஆயுர்வேத திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைவாக தகைமை பெற்றுள்ள பரீட்சார்த்திகள், வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணபப்படிவத்தை தயாரித்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை-2013 (I) எனக் குறிப்பிட்டு திணைக்களத் தலைவருடாக பதிவுத்தபாலில் எதிர்வரும் ஒக்டேபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன மஹரகம என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இவ்விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களை நாளை வெள்ளிக்கிழமை வெளியாகவுள்ள வர்த்தமானி பத்திரிகையில் அல்லது வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (அ-7)

# தலைவலி தீர்ந்தாலும் தீராத... திருகுவலி...?

## கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்பாரா மன்மோகன்?



வடக்கு மாகாண சபைத் தேர்தலை, இலங்கை மீதான அழுத்தம் கொடுப்பதற்கான கருவியாக இந்தியா பயன்பத்தி வந்துள்ளது. அந்த வகையில், தேர்தல் குறிப்பிட்ட நாளில் நடந்து முடிந்திருப்பது, இந்தியாவைப் பொறுத்தவரையில் நிம்மதி. அதேபோலவே, வடக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடத்தி முடித்ததையிட்டு திருப்திப்பட்டுக் கொள்வது போல இலங்கை அரசாங்கமும் காட்டிக்கொள்கிறது. வடக்கு மாகாணசபையையும் தாமே கைப்பற்ற வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக அமைந்திருந்தது.

ஆனால், முடிவுகள் யாவும் அரசாங்கத்திற்கு எதிராகவே அமைந்துள்ளமையினால், தேர்தலை நடத்தியதே பெரிய வெற்றி தான் என்றும், வடக்கு மக்களுக்கு ஜனநாயக உரிமைகளைக் கொடுத்துவிட்டதில் திருப்தி கொள்வதாகவும் கூறி- விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று தம்பட்டம் அடிக்கும் அரசாங்கம், அடுத்து என்ன செய்யப் போகிறது என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

சர்வதேச அழுத்தங்களினால் தான், வடக்கில் தேர்தலை நடத்தும் முடிவை எடுக்கவேண்டிய நிலை, அரசுக்கு ஏற்பட்டது. அத்தகைய அழுத்தங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், தேர்தலை நடத்தி முடித்ததையிட்டு அரசாங்கம் நிம்மதி கொள்ளலாம். ஆனால், வடக்கில் தேர்தலை நடத்தி முடித்துவிட்டதுடன், எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்தது என்று இலங்கை அரசாங்கத்தினாலும் சரி, இந்திய அரசாங்கத்தினாலும் சரி நிம்மதியாக இருந்துவிட முடியாது. ஏனென்றால், இதற்கும் அப்பால், இந்த நாடுகளுக்கு நெருக்கடிகள், சிக்கல்கள், அழுத்தங்கள் உள்ளன.

வடக்கு மாகாணசபைத் தேர்தலை அடுத்து, இந்த இரண்டு நாடுகளுக்கும் பொதுவான- சவாலானதொரு விடயமாக இருப்பது கொமன் வெல்த் மாநாடு தான். கொமன் வெல்த் மாநாட்டை எந்தச் சிக்கலுமின்றி, எந்த நாட்டினது புறக்கணிப்புமில்லாமல் நடத்தி முடிக்க வேண்டும் என்பது இலங்கை அரசாங்கத்தின் கவலை.

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்பதா இல்லையா என்பது இந்தியாவின் கவலை.

இந்தியாவும்,, கனடாவும் இந்த மாநாட்டில் பங்கேற்பது குறித்து எந்த உறுதியையும் வழங்கவில்லை என்று வெளிவிவாகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கடந்த புதன் கிழமை தெரிவித்துள்ளார். ஆனால், இந்த நாடுகள் கொமன் வெல்த் மாநாட்டை முற்றாகப் புறக்கணிக்காதுவிட்டாலும், இவற்றின் தலைவர்கள் பங்கேற்பார்களா என்பது தான் சந்தேகம். வெளிவிவகார அமைச்சர் பீரிசினால் கூட இந்த விடயத்தில் உறுதியாக எதையும் சொல்ல முடியாத நிலையே உள்ளது.

கனேடியப் பிரதமர் நீண்டகாலமாகவே கொமன்வெல்த் மாநாட்டை புறக்கணிகப்போவதாக எச்சரித்து வருகிறார். அவரது வருகை சந்தேகத்துக்குரியது தான். ஆனால், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவ்வாறு இல்லை. அவர் எதையும் வெளிப்படையாக கூறவும் இல்லை. அவர், அவ்வாறு கூறக்கூடிய ஒருவரும் அல்ல.

கொமன் வெல்த் மாநாடு தொடர்பான எல்லா நகர்வுகளையும் இந்தியா இரகசியமாகவே மேற்கொள்கிறது.

பல சந்தர்ப்பங்களில், கொமன் வெல்த் மாநாட்டுப் புறக்கணிப்புக்கு எதிரான கருத்துக்கள் மத்திய அரசிடம் இருந்து வெளிப்பட்டிருந்தாலும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஒருபோதும் அதுபற்றி வாய்திறந்ததில்லை. அதற்கு அவரது இயல்பான சுபாவம் மட்டும் காரணமில்லை. கொமன்வெல்த் மாநாட்டுக்கு இன்னும் இரண்டு மாதங்கள் உள்ளன என்பதால், அவசரப்பட வேண்டியதில்லை.

இந்தியாவும் இலங்கையும் வெளிப்படையாக உறவு பாராட்டிக் கொண்டாலும், மறைமுகமாக அவற்றுக்கிடையில் பல உரசல்கள் உள்ளன.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கை அரசின் போக்கு இந்தியாவுக்கு சுத்தமாகப் பிடிக்கவேயில்லை.

சீனாவுடனும், பாகிஸ்தானுடனும். காட்டும் நெருக்கமும் இந்தயாவுக்கு கவலையளிக்கின்ற ஒன்றாகவே உள்ளது.

இந்நிலையில் கொமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்ற கருத்து தமிழ் நாட்டிலும் வலுப்பெற்றுள்ளது. இந்தக் கருத்தை தட்டிக்கழிப்பதற்கான காலம் இதுவல்ல- இந்திய பிரதமர் தேர்தல் நெருங்கிவிட்டது என்பதால், தமிழ்நாட்டின் அழுத்தங்களைப் புறக்கணித்து நடக்க முடியாது. இவற்றை வைத்து இந்தியா சில காய்களை நகர்த்த முனைவதாகத் தகவல்கள் வெளியாகின்றன.

அதன் ஒரு கட்டமாக மன்மோகன் சிங் கொழும்பு வருவதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், அதனை வெளிவிவகார அமைச்சர் பீரிசும், வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகமவும் மறுத்தனர். இந்தியா, அத்தகைய நிபந்தனைகளை முன்வைக்கவில்லை என்று அவர்கள் கூறியுள்ளனர். எனினும், அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இந்த நிபந்தனைகளை முன்வைப்பார் என்கிறது மற்றொரு தகவல்.

13-வது திருத்தச் சட்டத்தை தொடர வேண்டும். 13-வது திருத்தச் சட்டம் தொடர்பாக, எந்த திருத்தத்தையோ, அதிகாரக் குறைப்பையோ மேற்கொள்ளக் கூடாது. இது முதல் நிபந்தனை. இந்திய மீனவர்கள், மீன்பிடிப்பதற்கு இலங்கை கடற்படை கடைப்பிடித்துவரும் கைது உள்ளிட்ட கெடுபிடிகளைத் தளர்த்த வேண்டும். இது இராண்டாவது நிபந்தனை.

சம்பூர் அனல் மின்நிலைய உடன்பாடு குறித்து, உடனடியாக முடிவுக்கு வரவேண்டும். இது மூன்றாவது நிபந்தனை. இந்த நிபந்தனைகளுக்கு இலங்கை அரசு கொடுக்கும் பதிலைப் பொறுத்து மன்மோகன் சிங்கின் கொழும்பு பயணம் திட்டமிடப்படும் என்று கூறப்படுகிறது.

அதாவது, கொமன்வெல்த் மாநாட்டை பகடைக்காயக்கி சில காரியங்களை சாதிப்பதற்கு இந்தியா நீண்டகாலமாகவே முயற்சித்து வந்தது. இந்த நிலையில், இந்தியா இந்த நிபந்தனைகளை முன்வைத்தால் கூட ஆச்சரியப்படமுடியாது.

இந்த நிபந்தனைகள் இலங்கைக்கு நெருக்கடி கொடுப்பதாகவே இருக்கும். கொமன்வெல்த் மாநாட்டு விடயத்தில், தற்போது இந்தியா முடிவெடுக்க முடியாமல் இருக்கிறது என்பது உண்மைதான், என்னதான் இருந்தாலும் இன்னும் சில வாரங்களில் இந்தியாவின் முடிவை அறிவித்தேயாகவேண்டும். அது எத்தகைய முடிவாக இருந்தாலும் அதனை நியாயப்படுத்திக் கொள்வதற்கு சில காரணங்கள் தேவை. அந்தக் காரணங்களை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் தான் புதுடெல்லி இறங்கியுள்ளது.

இந்தியப் பிரதமர் கொமன் வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கும் நிலை ஒன்று ஏற்பட்டால், அது இலங்கைக்குப் பெரும் அவமானமாகிவிடும். அதனை முடிந்தளவுக்கு தடுக்கவே இலங்கை முனைகிறது. ஆனாலும், என்ன நடக்கும் என்று இப்போது அறுதியிட்டுக் கூறிவிட முடியாது.




-ஹரிகரன்-




# சிறுவர் அரங்கம்


## பெருந்தனக்காரன் தண்டிலன் கதை



வர்த்தமானம் என்னும் ஊரில் தண்டிலன் என்றொரு பெரிய வியாபாரி இருந்தான். அவன் சிறந்த அறிவாளி. அதனால் மன்னராலும் மக்களாலும் பெரிதும் மதிக்கப் பட்டான். தண்டிலன் தனது மகளின் திருமணத்தை மிகவும் ஆடம்பரமாக நடத்தினான். அவன் அரசரையும் அரசியையும் அரண்மனையிலுள்ள அனைவரையும் அத்திருமணத்திற்கு அழைத்திருந்தான். அரச குடும்பத்தினர் அமர்வதற்கு சிறப்பு ஏற்பாடுகளைத் தண்டிலன் செய்திருந்தான்.

திருமணத்தன்று அரசன் அமர வேண்டிய இருக்கையில் தவறுதலாகக் கோரம்பன் என்னும் அரசனின் பணியாள் ஒருவன் அமர்ந்துவிட்டான். அதைக் கண்டு தண்டிலனுக்குப் பெருத்த சினம் உண்டாயிற்று. அவன் தனது பணியாட்களைக் கூப்பிட்டு கோரம்பனை நன்கு அடித்துத் துரத்துமாறு கூறினான். எல்லோர் முன்னிலையிலும் தான் இவ்வாறு அவமதிக்கப்பட்டது கோரம்பனுக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கியது.


இதற்குப் பழி வாங்க வேண்டுமென்று அவன் முடிவு செய்தான் அரசனிடம் தண்டிலனைப் பற்றிக் குறை கூறுவதற்கு தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.



அதிர்ஷ்டக் காற்று கோரம்பன் பக்கம் வீசியது. ஒருநாள் அவனுக்கு அந்தப்புரத்திலுள்ள அரசனின் பள்ளியறையைச் சுத்தம் செய்யும் பணி தரப்பட்டது. அவன் காலையில் பள்ளியறைக்குச் சென்றபொழுது அரசன் விழித்தும் விழிக்காத பாதி உறக்கத்தில் இருப்பதைக் கண்டான்.

கோரம்பன் தனக்குள் முணுமுணுப்பவன் போல் சே... சே...! என்ன உலகம் இது? வியாபாரி தண்டிலன் அரண்மனைக்கு வரும்பொழுதெல்லாம் அரசியை முத்தமிடுவதை மன்னர் அறியவில்லையே! என்று கூறினான்.

இதைக் கேட்டவுடன் அரசன் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து கோரம்பனைப் பார்த்து தண்டிலனையும் அரசியையும் பற்றி அவன் சொன்னது உண்மைதானா என்று கேட்டான்.



அதற்கு கோரம்பன் பயந்தவன் போல் பாசாங்கு செய்து அரசே! நான் சூதாட்டத்தில் கலந்து கொண்டதால் நேற்றிரவு முழுவதும் தூங்கவில்லை. இப்பொழுது என் கண்களைத் தூக்கம் சுழற்றியடிக்கிறது.

அதனால் நான் என்ன சொன்னேன் என்பது எனக்கே தெரியாது என்று கூறினான்.

அரசன் அவனைப் போகச் சொல்லி விட்டான். ஆனால், அவனது சந்தேகமோ வளர்ந்து கொண்டே வந்தது. தண்டிலனுக்கு அரண்மனையில் எந்தவொரு தடையுமில்லை.

அதனால் அவன் தினமும் அரசியைச் சந்திப்பதை நன்கறிவான்.

இவன் கூறியதில் ஏதோ உண்மை இருக்க வேண்டும்! தூக்கக் கலக்கத்தில் ஒருவன் சொல்லது உண்மையாகத்தான் இருக்கும் என்று நாம் கேள்விப்பட்டதில்லையா? என்று அவன் எண்ணினான்.

அன்றுமுதல் தண்டிலனிடம் அரசன் நடந்துகொண்ட முறையில் மாற்றம் தென்பட்டது. முன்பெல்லாம் தண்டிலன் வந்தால் அரசன் அவனை வரவேற்று அவன் கூறும் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வான்.

ஆனால் இப்போதோ அவன் மீது வைத்திருந்த நம்பிக்கை சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது.

இதற்கிடையே தண்டிலனும் மிகவும் அரிதாகவே அரண்மனைக்கு வந்து சென்றான்.

அரசன் அரண்மனைக் காவலர்களை அழைத்து தண்டிலனை இனி மேல் அரண்மனைக்குள் அனுமதிக்கக் கூடாது என்று ஆணையிட்டான்.

ஒருநாள் வழக்கம் போல் தண்டிலன் அரண்மனைக்கு வந்தான்.

(தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1255 - அசிசியின் புனித கிலாராவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.
- 1580 - சேர் பிரான்சிஸ் டிரேக் உலகைச் சுற்றி வந்தார்.
- 1907 - நியூசிலாந்து, நியூபவுண்லாந்து இரண்டும் பிரித்தானிய பேரரசின் டொமினியன்களாயின.
- 1918 - முதலாம் உலகப் போர்; அமெரிக்க வரலாற்றிலேயே அதிக இரத்தம் சிந்திய போர். மியூஸ்-ஆர்கன் தாக்குதல் பிரான்சில் ஆரம்பம்.
- 1934 - ஆர்.எம்.எசு.குயீன் மேரி நீராவிக்கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1950 - ஐக்கிய நாடுகள் படையினர் வடகொரியாவிடமிருந்து சியோல் நகரை மீண்டும் கைப் பற்றினர்.
- 1950 - இந்தோனேசியா ஐ.நா.வில் இணைந்தது.
- 1960 - ஐக்கிய அமெரிக்காவில் முதல் தடவையாக அரசுத் தலைவருக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களின் தொலைக்காட்சி நேரடி விவாதம் ரிச்சார்ட் நிக்சனுக்கும் ஜோன்எஃப் கென்னடிக்கும் இடையில் இடம்பெற்றது.
- 1960 - பிடெல் காஸ்ட்ரோ சோவியத் ஒன்றியத்துக்கான தமது ஒத்துழைப்பை அறிவித்தார்.
- 1962 - ஜேர்மன் அரபு குடியரசு அமைக்கப்பட்டது.
- 1973 - அத்திலாந்திக் மேலான தனது முதலாவது இடைநிறுத்தல் இல்லாத பயணத்தை கொன்கோர்ட் விமானம் பறந்து காட்டியது.
- 1984 - ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கை சீனாவிடம் கையளிக்க ஒப்புக்கொண்டது.
- 2008 - சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த இவெசு ரொசி ஆங்கிலக் கால்வாயை ஜெட் இயந்திரம் பூட்டப்பட்ட இறக்கை மூலம் கடந்த முதலாவது மனிதர் என்ற பெயரைப் பெற்றார்.

### பிறப்புகள்

- 1890- பாபநாசம் சிவன், கருநாடக இசை அறிஞர் (இ.1973)
- 1908 - பெரியசாமி தூரன், கருநாடக இசை அறிஞர் (இ.1987)
- 1913 - திருக்குறள் வீ.முனிசாமி, தமிழறிஞர் (இ.1987)
- 1932 - மன்மோகன்சிங், இந்தியப் பிரதமர்
- 1981 - செரீனா வில்லியம்ஸ், அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை

### இறப்புகள்

- 1895 - லூயி பாஸ்டர், வேதியியல் அறிஞர் (பி.1822)
- 1954 - தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (பி.1876)
- 1959- எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, இலங்கை பிரதமர் (பி.1899)
- 1976 - லாவொஸ்லாவ் ரூசிக்கா, நோபல் பரிசு பெற்றவர் (பி.1887)
- 1978 - மான் சீக்பான், நோபல் பரிசு பெற்றவர் (பி.1886)

### லூயி பாஸ்டர்



நுண்ணுயிரியலின் தந்தை என்று அழைக்கப்படும் லூயிஸ் பாஸ்டர் ஒரு வேதியலாளர். வேதி நொதித்தல் நிகழ்வை உற்றுநோக்கும்போது நுண்ணுயிரிகளைப் பற்றி இவர் அறிந்து கொண்டார். நுண்ணுயிரியல்துறையில் இவரது பங்கு அளப்பரியது. இவர் நடத்திய ஆய்வுகளின் பயனாய் பல நோய்கள் நுண்ணியிரிகளால் ஏற்படுகின்றது என்று அறிந்தார்.

இவர் முதன்முதலாக விலங்கு விசர்நோய் (வெறிநாய்) ஏறிய விலங்குகளின் கடியில் இருந்து காக்க ஒரு தடுப்பூசி மருந்தைக் கண்டுபிடித்தார்.

பாலும், குடிக்கும் கள்ளும் எவ்வாறு கெட்டுப் போகாமல் இருக்கிறது என்பதற் காக இவர் முன்வைத்த முறை இன்று பாஸ்டரைசேஷன் (பாச்சர் முறை) என்னும் பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.

நுண்ணியிரி இயலை நிறுவிய மூவருள் இவர் ஒருவராகக் கருதப்படுகின்றார்.

# முன்பள்ளிகள் சமுதாய குழந்தைகளை கௌரமாக மதித்து செயற்படுகின்றனவா?

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

29


பேராசிரியர் மா.சின்னத்தம்பி

அறிமுகம்

"தவறான முறையில் செயற்படும் முன்பள்ளிகள் தொடர்ந்து செயற்படுவது இயலாது. இதற்கான சட்டதிருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது"

Sunday Times-15-9-2013

இலங்கையின் மேல் மாகாணத்தில் செயற்படும் முன்பள்ளிகள் தொடர்பான நடவடிக்கை பற்றியே மேற்படி கூற்று விபரிக்கின்றது.

அதிக அரச மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் கவன ஈர்ப்புக்குரிய மேல் மாகாணத்திலேயே தவறான முறையில் முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன என்பதை இது தெளிவுபடுத்துகின்றது. பத்து வருடங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்ட மேற்கு மாகாண சபையின் முன்பள்ளி தொடர்பான சட்டம் இப்போது திருத்தப்பட்டு தகுதியுடன் இயங்காத முன்பள்ளிகளை மூடி விடுவதற்குரிய செயலில் கவனம் செலுத்தப்படுகின்றது.

இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் அரச உதவி பெற்று நடத்தப்படுகின்ற அல்லது அத்தகைய உதவிகள் பெறாத முன்பள்ளிகள் பல இலாபம் சம்பாதிப்பதற்கு அல்லது தொழில்வாய்ப்பு உருவாக்குவதற்காகவே இயங்குகின்றன என்று பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இது சமூக நீதியுடையதுதானா என்பது பற்றி இன்று கலந்துரையாடுவோம்.

குழந்தைகளும் நோயாளர்களும் இலாபத்தின் புதையல்களாக நோக்கப்படுவது நியாயமா என்ற சமுதாய கேள்வியின் உண்மைத்தன்மை பற்றிய கலந்துரையாடலாகவும் இதனை கருத முடியும்.

### முன்பள்ளிகள் எவை?

ஐந்து வயதிலும் குறைந்த பிள்ளைகள் குறிப்பாக இரண்டிலிருந்து நான்கு அல்லது ஐந்து வயதுவரை கற்றல் அனுபவங்களை தகுதி மிக்க, நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் உதவியுடன் பெறுவதற்கான நிறுவனங்களே முன்பள்ளிகளாகும்.

நல்ல முன்பள்ளிகள் பிள்ளைகளின் நீண்டகால பண்பு நலன்களையும் உளவியல் விருத்தியையும் உருவாக்கவல்லன. வீட்டுக்கு வெளியே பெறும் முதல் சமூகமயமாக்கல் அனுபவம் பெறுமிடம் இதுதான். மாறுபட்ட சகபாடிகளை இயல்பாக பார்த்தும் உணர்ந்தும் தம் சிந்தனையையும் உணர்வையும் பிள்ளைகள் அகலப்படுத்திக் கொள்ளும் தூய்மையான அனுபவங்களை இவை வழங்க வேண்டும்.

ஆனால், இவற்றின் சமுதாய முதன்மையை புரிந்துகொள்ளாமல் தாறுமாறாக முன்பள்ளிகளைச் சில தனியார் நிர்வகிக்கின்றனர். இது மிகவும் கவனமாக மழலைகளுக்கு தீய அனுபவங்களையும் முரண்பட்ட உளவியல் நிலைமைகளையும் வழங்குவதாகி விடுகிறது. குழந்தைகளில் ஏற்படும் தாக்கங்களை பெரிதுபடுத்தாமல் நடாத்தப்படும் மழலைக் கல்வி வியாபார நிலையங்கள் சமுதாய நீதியை- சமுதாய தேவையை நிராகரிப்பனவாகி விடுகின்றன.

இத்தகையை தீமை செய்யும் முன்பள்ளிகள் மீது 50 ஆயிரம் ரூபா வரையில் தண்டப்பணம் விதிப்பதற்குரிய சட்டம்தான் மேல் மாகாணசபையினால் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை எமது மாகாணங்களும் பின்பற்றினால் என்ன? குழந்தைகளின் மழலைப் பண்பை பாதுகாத்தால் என்ன?

அரசியல் அமைப்பில் (1987 இல்) 13 ஆவது திருத்தச்சட்டமூலமானது முன்பள்ளிகள் தொடர்பான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கியது. முன்பள்ளிகளை பதிவு செய்தல், .மேற்பார்வை செய்தல், கண்காணித்தல் தொடர்பான அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டன. அரச பாடசாலைகள் போல முன்பள்ளி நிர்வாக கண்காணிப்பு முறைகளில் அரசாங்கம் முழுமையாக ஈடுபடுவதில்லை. ஆனால், சில வகை உதவிகளை வழங்கி கண்காணிப்பதில் ஈடுபட்டு வருவதில் மாகாணசபை சில பொறுப்புக்களை ஏற்றுள்ளது.

தனிப்பட்டவர்களும் சனசமூக நிலையங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச பாடசாலைகளும் முன்பள்ளிகளை வெவ்வேறு மாதிரிகளில் நிர்வகித்து வருகின்றன. மேல்மாகாணத்தில் மாத்திரம் 2013 ஜூன் மாதத்தில் அத்தகைய 3 ஆயிரத்து 299 முன்பள்ளிகள் தொழிற்பட்டு வந்தன. மிகப் பெரிய ஏற்றத் தாழ்வுகள் கொண்ட தராதரங்களுடன் இவை இயங்குகின்றன. சமூக அந்தஸ்து, வர்க்க வேறுபாடு, வறிய-செல்வந்த குடும்ப வேறுபாடு என்பவற்றின் மையங்களாக இவை எல்லா மாகாணங்களிலும் செயற்படுகின்றன. "தமக்கு என்ன செய்கிறார்கள்?" என்பதை உணர்ந்து கொள்ள முடியாத மழலைப்பருவத்தில் பல முரண்பட்ட செயல்கள் அவர்கள் மீது திணிக்கப்படுகின்றன.

இந்தியாவில் இரண்டுவயதிலிருந்து நான்கு வயது வரை பிள்ளைகள் முன்பள்ளிகளில் கற்கிறார்கள். இலங்கையில் மூன்று மற்றும் நான்கு வயதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

முன்பள்ளிகள் யாழ்ப்பாண மாவட்டத்திலும் கணிசமான அளவில் பரவலாக இயங்கி வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தின் புள்ளி விபர கையேடு 2012 இல் பல்வேறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் செயற்பட்ட முன்பள்ளிகளின் விபரங்களைத் தருகின்றது.

### யாழ்ப்பாண மாவட்டத்தில்:

முன்பள்ளிகளின் எண்ணிக்கை 720

மாணவர்களின் எண்ணிக்கை 19, 839

முன்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கை 1373

இத்தகைய முன்பள்ளிகளில் பிள்ளைகள் தமது வீடுகளில் பெற முடியாத மிகச் சிறந்த சூழலையும் மானிட உணர்வுகளையும் முன்பள்ளிகளில் பெற வேண்டும். கவனமில்லாத சூழல்களிலிருந்து மிகவும் அக்கறையும் இனிமையும் கலந்த சூழ லுக்கு பிள்ளை களை மாற்று வதே முன்பள்ளி களின் இலக்காகும்.

நல்ல முன்ப ள்ளிகள் என்று கருத தப்படக் கூடியனவற்றையெல்லாம்வழ ங்க வேண்டும்?




- ✷ பிள்ளைகளுக்கு பாதுகாப்பு தரும்சூழலிருத்தல்
- ✷ மகிழ்ச்சி தரும் உரையாடல்களை முன்னேற்றுதல்
- ✷ பண்பாடு மிக்க நடத்தைப் போக்குகளை வளர்த்தல்
- ✷ சுக வாழ்வுக்கு வழிகாட்டும் சுகாதாரப் பழக்கங்களை கற்றுக் கொடுத்தல்
- ✷ நல்ல மனப்பான்மை, நம்பிக்கையுணர்வு என்பவற்றை வளர்த்தல்
- ✷ உடல் மற்றும் திறன் விருத்தி பெறுதல்
- ✷ புத்திசாலித்தனத்தை இதமாக வளர்த்தல்
- ✷ சுயமாக வெளிப்படும் புத்தாக்க திறனை வளர்த்தல்

இவைபற்றிய விழிப்புணர்வு பெற்றோருக்கு வேண்டும். உங்கள் பிள்ளைகள் இணைந்துள்ள முன்பள்ளிகள் மேற்படி சூழலையும் செயற்பாடுகளையும் கொண்டிருப்பதாக நீங்கள் நம்புகிறீர்களா? அதை பரிசோதிப்பது உங்கள் கடமை என்பதை பெற்றோர்கள் மறந்து விடக் கூடாது. உங்கள் சோம்பேறித்தனம் உங்கள் பிள்ளைகளை சிதைத்துவிடவும் கூடும்.

குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் பெருகுவதற்கு மற்றொரு காரணம் தம் பிள்ளைகளில் போதிய நேரம் செலவிட முடியாதவர்களாக பெற்றோர்கள் மாறியமையும்தான். முதியவர்களை "உபத்திரவமாக". கருதி எல்லா மனித உறவுகளுக்கும் உணர்வுகளுக்கும் பல நிறுவனங்களை உருவாக்கிக் கொண்டுள்ளோமே! இதுவும்தான் மழலைகளுக்கு பாதுகாப்பற்ற உலகமாக சமூகம் மாறுவதற்கு காரணமாகும்.

இதனால் இப்போது முன்பள்ளிகள் தொடர்பாகபின்வருவனவும் கொள்கைகளாகவும் நடைமுறைகளாகவும் வலியுறுத்தப்படுகின்றன.

✷ முன்பள்ளிகளில் கற்கும் பிள்ளைகளின் பெற்றோரிடம் முன்பள்ளிக் கல்வி பற்றிய போதிய அறிவையும் தெளிவையும் உருவாக்குதல்.

✷ பெற்றோர் அல்லாத பொதுமக்களும் மழலைகள் கற்கும் முன்பள்ளிகளின் குறிக்கோள், செயற்பாடு, பலவீனம், தீய செயல்கள் பற்றிய அறிவைப் பெற்று அவற்றைக் கண்காணிப்பதற்கு ஊக்குவிக்கப்படுதல்.

✷ கற்பிக்கும் ஆசிரியர்களின் உடல் ஆரோக்கியம், உளவியல் பக்குவம், குழந்தைகளைக் கையாளும் திறன்கள், குழந்தைகளுடன் அன்பையும் பரிவையும் காட்டும் நேர்த்தி என்பவற்றை தரமானதாக முன்னேற்றுதல்.

முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வி, உளப்பாங்கு, அணுகுமுறை, சுகாதாரப் பழக்கம், பொறுமை, ஒழுங்கு, பிள்ளை மீதான பாச உணர்வின் வெளிப்பாடு என்பன மிக மிக முக்கியமானவை.

இவர்களுக்கான அறிவியல் பயிற்சி என்பதை விடவும் உளவியல் பயிற்சி, நடத்தை மேம்பாட்டுக்கான பயிற்சி, மருத்துவ அறிவு என்பன அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களை விடவும் முன்பள்ளி ஆசிரியர்களின் தகைமையும் தொழில் அணுகுமுறையும் தொழில் ஈடுபாடும் மிகவும் முக்கியமானவை. இதனை சமூகம் அதிக அக்கறையுடன் உணர்ந்து கொள்ள வேண்டும். குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக கூர்மையான அவதானத்துடன் சமூகம் செயற்படவேண்டும்

### முன்பள்ளிகளின் அமைவிடம் சரியானதா?

வீடுகளை விடவும் முன்பள்ளிகள் வசதியானவை, இதமானவை, பாதுகாப்பானவை என்று பெற்றோர் நம்பினால் மாத்திரமே அங்கு தம் பிள்ளைகளைச் சேர்த்தல் வேண்டும். அடிக்கடி அவை செயற்படும் நேரத்தில் அவதானித்து சில தீர்மானங்களையும் பெற்றோர் எடுக்க வேண்டும்.

"எல்லாம் நன்றாகவே இருக்கும்" என்று கருதி ஒதுங்கியிருக்கக்கூடாது. ஏனெனில் பல முன்பள்ளிகளில் பல விடயங்கள் சரியாக இல்லை. பிள்ளைகளின் செயற்பாடுகளை கவனியாமல் முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் கைத் தொலைபேசிகளில் மணித்தியாலக் கணக்கில் பேசிக் கொண்டிருப்பதை பல இடங்களில் அவதானித்ததாக முன்பள்ளி பற்றி ஆய்வு செய்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பிள்ளைகள் நடமாடும் இடமும் தளபாடங்களின் மாதிரிகையும் பிள்ளைகளுக்கு பாதுகாப்பானவைதானா? சுகாதாரமானவைதான? என்பதையும் பெற்றோர் உறுதிப் படுத்த வேண்டும்.

நல்ல முன்பள்ளிகள் பின்வருவனவற்றையும் கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

✷ ஒரு பிள்ளைக்கான (சராசரி) கட்டட இட வசதி பத்து சதுர அடியாக இருத்தல் வேண்டும்.

✷ ஒவ்வொரு 25 பிள்ளைகளுக்கும் ஒரு சுத்தமான அவர்களது உயரத்துக்கு ஏற்றதான கழிப்பறைகளும் கைகழுவும் நீர்க்குழாய்களும் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

✷ முன்பள்ளியைச் சுற்றி பாதுகாப்பான வேலி அல்லது சுவர் இருத்தல் அவசியம். தீமை செய்யும் நாய்கள், கீரிகள், குரங்குகள், விஷப்பிராணிகள் நுழைந்து பிள்ளைக ளைக் கடிக்காமல் இருக்க பாதுகாப்பு வேண்டும். முன்பள்ளி அமைக்கப்படும் இடத்தை தெரிவு செய்யும் போது இவை கவனத்திற்கு எடுக்கப்படுதல் வேண்டும்.

✷ முதல் உதவிப் பெட்டிகள் இங்கு கட்டாயம் பேணப்படுதல் வேண்டும். அதில் காலாவதியான மருந்துகள் இருத்தல் கூடாது. கட்டும் துணிகள் புதியனவாகவும் பாதுகாப்பானவையாகவும் பேணப்படுதல் வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முதல் நிலை மருத்துவ கல்வியும் பயிற்சியும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

ஒரு மருத்துவரின் உதவியும் அவசரமான பரிகார வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

✷ பிள்ளைகள் ஓடியாடி விளையாடும் பருவம் இதுதான். பள்ளிக் கூடம் சேர்ந்து விட்டால் விளையாட விடாமல் பெற்றோர் ரியூசன் பேயிடம் அவர்களை ஒப்படைத்து விடுவார்கள். இதனால் இப்போதே சுதந் திரமாகவும் குதூகலமாகவும் குழந் தைகளுக்கே உரிய சின்னச் சின்ன தவறுகளுடன் விளையாடுவதற்குரிய போதிய இடவசதியும் காயம் விளைவிக்காத, பாதுகாப்பான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

✷ ஒவ்வொரு 20 பிள்ளைகளுக்கும் ஒரு ஆசிரியராவது இருத்தல் வேண்டும். 10 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் இருப்பின் மிகவும் விரும்பத்தக்கது.

✷ பிள்ளைகள் சுதந்திரமாக பிரார்த்தனை அல்லது கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவதற்கேற்ற தூய்மையான சூழலும் இடவசதியும் இருப்பது அவசியம். தமிழர்களின், "உளவியல் பரிபக்குவத்துக்கான விஞ்ஞானக் கண்டுபிடிப்பே" இசையுடன் இணைந்த வழிபாடாகும். கண்களை மூடி, கைகள் குவித்து ஆழ்மன உள்ளம் தொடும் உணர்வு தானே கடவுள் வழிபாடு. மழலைகளுக்கு அத்தகைய பயிற்சியை வழங்குவதும் அவசியம்.

✷ ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் இனிமையாக, மென்மையாக, மெதுவாக உரையாட வேண்டும். அவர்கள் தெளிவின்றி சொல்வதை கூர்மையான அவதானிப்பு டன் செவி மடுக்க வேண்டும். இதனையே மென்மையான திறமைகள் (Soft Skills) என்கிறோம். இதில் ஆசிரி யர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சி வழங்கப்படுதல் மிக மிக அவசியம். இதனாலேயே போதுமான முன்பள்ளிக் கல்வியும் பயிற்சியும் பெற்றவர்கள் அல்லது குறைந்தது பத்து வருட முன்பள்ளி அனுபவம் கொண்டவர்களையே ஆசிரியர்களாக வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

### முடிவுரை:

பெற்றோர்களே! இவையெல்லாம் உங்களுக்காக சொல்லப்பட்டவைதான். உங்கள் பிள்ளைகளை "தவிர்க்கமுடியாத தொந்தரவாகவோ" பிரகடனப்படுத்த முடியாத துன்பியலாகவோ பார்க்காதீர்கள்.

எதிர்காலத்தில் அவர்கள் தண்டனைக் கூடங்களிலோ , உளவியல் சிகிச்சை நிலையங்களிலோ வசிக்கக்கூடாது.

மகிழ்ச்சியும் வசதியும் பெருமையும் தரக் கூடிய தொழிலிடங்களில் அவர்கள் பணிபுரியவேண்டும். நல்ல கணவனாகவோ / மனைவியாகவோ சிறந்த பெற்றோராகவோ பண்புமிக்க சகோதரர் களாகவோ வாழ வேண்டும். இதற்கு நல்ல முன்பள்ளிகளைத் தெரிந்து அனுமதியுங்கள், செயற்படும் நேரங்களில் சென்று அவதானியுங்கள். அவர்கள் உங்கள் பெயர் சொல்லும் அடுத்த தலைமுறை; மறந்து விடாதீர்கள்.

"குழந்தைகளுக்கென அவர்களே ஒரு நீதிமன்றம் நடத்தினால் பல பெற்றோருக்கு மரண தன்டனையை அவர்கள் விதிப்பார்கள்"

கீதோபதேசம்

# விஜயனுக்கு குருசேத்திரத்தில் விக்கிக்கு பெற்றோல் நிலையத்தில்

குருஷேத்திரத்தில் பாரத யுத்தம் ஆரம்பமாகிறது. வில்லுக்கு விஜயன் என்ற `அர்ச்சுனனை நம்பியே பாண்டவர் சேனை களமிறங்குகிறது.

வில்லுக்குரியவனான விதுரன் கௌரவர் சபையில் தன் வில்லை முறித்து இனிமேல் கையில் வில் எடேன் என்று சத்தியம் செய்ததன் காரணமாக அவன் போர்க்களம் புகவில்லை.

ஆக, பாண்டவர் சேனைக்கு விஜயனே தலைமை தாங்கவேண்டும். ஆனால் கௌரவர் சேனையில் இருக்கக்கூடிய பீஷ்மர், துரோணர் ஆகிய தம் ஆசான்களைக் கண்ட மாத்திரத்தில் அருச்சுனன் ஏக்க முறுகிறான். எனக்குப் போர்ப்பயிற்சி தந்த ஆசான்களைக் கொல்லவோ! வில் எடுத்தேன். எனக்கு நாடும் வேண்டாம். ஆட்சியும் வேண்டாம் என்று விஜயன் முடிவெடுக்கிறான். இந்த நேரத்தைப் பயன் படுத்திக்கொண்ட கிருஷ்ண பரமாத்மா, அருச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்கிறார். உன் கடமையை நீ சரியாகச் செய். நீ எந்த நோக்கத்திற்காக வந்தாயோ! அந்த நோக்கத்தை நிறைவேற்றவே உன் சரீரம் உனக்குத் தரப்பட்டது. என்ற



வாறு கீதோபதேசம் விரிகிறது.

குருஷேத்திரத்தில் உபதேசம் கேட்ட விஜயன் மனச்சலனத்தில் இருந்து மீள்கிறான். ஆசான், உற்றார், உறவினர் என்றெல்லாம் பார்த்தால் தர்மத்தைக் காப்பாற்றமுடியாது. ஆகையால், அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதே அரசாள்வோர் கடன். இந்தக் கடமையை நிறைவேற்ற பார்த்தன் வில்லெடுக்க, கண்ணபரமாத்மாவான தேர்ச்சாரதி தேரோட்ட தர்மம் வெற்றிபெற்று நிலைநாட்டப்படுகின்றது. இங்கு இருக்கக் கூடிய தத்துவம் தர்மத்தை நிலை நாட்டுவதற்கு- கடமையைச் செய்வதற்கு யார் முகமும் பார்க்கக்கூடாது என்பதாகும்.

அருச்சுனனுக்கு குருஷேத்திரத்தில் தத்துவ உபதேசம் செய்யப்பட்டது போல பலருக்குப் பல விடயங்கள் தத்துவங்களாக- தர்ம போதனைகளாக உணர்த்தப்பட்



டுள்ளன.

இவை தனிப்பட்ட அனுபவங்களாக நம் வாழ்வில் விரிந்து செல்வதை உணர்ந்து கொள்ளமுடியும்.

## விக்னேஸ்வரனுக்கு உணர்த்தப்பட்ட தத்துவம்

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டமை யாவரும் அறிந்ததே. அதிகூடிய விருப்பு வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இந்த நாட்டின் உச்சநீதி மன்ற நீதியரசராக இருந்தவர்.

வடக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 23.09.2013 அன்று ஒன்றுகூடி விக்னேஸ்வரன் அவர்களை வடக்கின் முதலமைச்சராக ஏகமனமாகத் தெரிவுசெய்தனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அன்றைய தினமே விக்னேஸ்வரன் அவர்கள் தனது வாகனத்தில் ஏ-9 வீதியால் கொழும்புக்குப் பயணமானார்.

கொழும்புப் பயணத்தில் வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்புவதற்காக சென்றனர். அங்கு தவறுதலாக டீசல் நிரப்பும் பம்பிக்கு அருகில் வாகனத்தை நிறுத்தியதன் காரணமாக, பெற்றோல் செற் பணியாளர் விக்னேஸ்வரன் அவர்களின் வாகனத்திற்கு டீசலை நிரப்பி விட்டார்.

என்ன செய்வது, பெற்றோலுக்குப் பதிலாக டீசல் நிரப்பப்பட்டதன் காரணமாக வாகனத்தைச் செலுத்தமுடியாமல்போக, உடனடியாகவே வாகனத்தைத் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதனால் சில மணி நேரங்கள் விக்னேஸ்வரன் ஐயாவின் பயணம் தடைப்பட்டது என்பது நடந்து முடிந்த செய்தி.

இச்சம்பவத்தைச் சிலர் சம்பவமாகக் கருதலாம். இன்னும் சிலர் திட்டமிட்ட சூழ்ச்சி என்று சொல்லலாம். இன்னும் சிலரோ! சாரதி கவனித்திருக்கவேண்டுமல்லவா? என்று முணுமுணுக்கலாம். ஆனால் நாம் அப்படி எதுவும் நினைக்களவில்லை.

மாறாக குருஷேத்திரத்தில் எங்ஙனம் அருச்சுனனுக்கு கீதோபதேசம் செய்யப்பட்டதோ அது போல விக்னேஸ்வரன் ஐயாவுக்கும் வவுனியா எரிபொருள் நிலையத்தில் முக்கியமான தத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது என்றே கருதுகிறோம்.

அதாவது பெற்றோல் செற் என்று பெயர் இருந்தாலும் அங்கு பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், ஒயில் ஆகிய எரிபொருட்கள் இருக்கும் என்பது முக்கியமான தத்துவம்.

அதேநேரம் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை நிரப்புவதற்கான பம்பிகளும் ஒரே மாதிரியானவை.

பெற்றோல் செற் என்பதாலும் பம்பிகள் அனைத்தும் ஒரே மாதிரியானவை என்பதாலும் அங்கு இருப்பதெல்லாம் பெற்றோல் என்று நினைத்துவிடலாகாது அவ்வாறு நினைத்தால் பயணம் தடைப்படும். சென்றடைய வேண்டிய இடத்தை அடைய முடியாது போகும் என்பதையே இந்தத் தத்துவம் சுட்டிக் காட்டுகிறது.

ஆக, வடக்கின் பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா அவர்களே!



பெற்றோல் செற் போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், ஒயில் என்ற தரங்களில் உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்கள் எல்லோருமே பெற்றோல் தரத்தினர் என்று நினைத்து விடாதீர்கள்.

உண்மையான தமிழ்ப் பற்றாளர்கள் யார்? சேவையாளர்கள் யார்? என்று இனங்கண்டு உண்மையானவர்களை, நேர்மையானவர்களை முதன்மைப்படுத்துங்கள். அப்போதுதான் வடக்கு மாகாண சபையின் நிர்வாகம் சுமுகமாக நடைபெறும். இதைவிடுத்து எல்லோரும் கூட்டமைப்பு என்று நினைத்தால், பெற்றோலுக்குப் பதிலாக டீசல் என்ற கதையாகிவிடும்.

எனவே நீங்கள் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட அந்த நன்நாளில் உங்களுக்கு வவுனியா எரிபொருள் நிலையத்தில் உணர்த்தப்பட்ட தத்துவம் இறைவனால் உங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட உயர்ந்த உபதேசம் என்று உணர்க.

- விதுரன்

# நிரந்தர வைத்தியரை நியமிக்க கோரிக்கை

(பூநகரி)

**பூநகரி அரசினர் வைத்தியசாலையில் கடந்த இரண்டு வருடங்களாக நிரந்தர வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் நீண்ட தூரங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு நோயின் வேதனையையும் பாராது செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையுள்ளது.**



இங்கு தற்காலிக வைத்தியர்கள் கடந்த இரு வருடங்களாக அக்கராயன் வைத்தியசாலையில் இருந்து வந்து கடமை புரிகின்றனர்.

இவ்வாறு தற்காலிகமாக கடமை புரியும் வைத்தியர்கள் மூன்று நாட்கள் மட்டுமே பி.ப. ஒரு மணியில் இருந்து பி.ப. 4 மணிவரை கடமை புரிகின்றனர்.

சிறிது நேரமே இவ் வைத்தியசாலையில் வைத்தி சேவை இடம் பெறுவதால், நோயாளர்கள் கால் கடுக்க நிற்க வேண்டிய நிலை உள்ளது.

இவ் வைத்தியசாலையை கறுக்காய் தீவு, ஞானி மடம், மட்டுவில் நாடு, பரம்பன் கிராய், கௌதாரி முனை, தம்பிராய், நல்லூர், ஆலங்கேணி, செம்மண்குன்று, பள்ளிக்குடா ஆகிய கிராமங்களை சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றனர்.

நிரந்தர வைத்தியர் இன்மையால் சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய வைத்தியசாலைகளுக்கு பணம், நேரம் என்பவற்றை செலவு செய்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இவ் வைத்தியசாலை புதிதாக நிர்மாணிக்கப்பட்டு 6 மாதங்களாகியும் இன்னமும் திறந்து வைக்கப் படாது தற்காலிகமாக வீடொன்றிலேயே இயங்கி வருகின்றது.

எனவே, நோயாளர்களின் நலன் கருதி நிரந்தர வைத்தியரை நியமித்து உதவ வேண்டுமென நோயாளர்களும் அப்பகுதி மக்களும் துறை சார்ந்த அதிகாரிகளிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-84)

# வழங்கப்பட்ட நிதி போதாமையால் வீடுகளை நிர்மாணிக்க முடியவில்லை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள நல்லூர் கிராம சேவையாளர் பிரிவில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் 357 வீடுகள் நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் 40 வீதமான வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட நிலையிலுள்ள போதிலும் 60 வீதமான வீடுகள் நிதி போதாமையால் முழுமையாக பூர்த்தி செய்ய முடியாது மக்கள் கஷ்டமடைவதாக அப்பகுதி கிராம சேவையாளர் அ.பரமேஸ்வரன் கவலை தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள தொழிலாளர் சம்பள அதிகரிப்பும் மூலப் பொருள் விலை உயர்வும் நிறுவனம் வழங்கிய 5 1/2 இலட்சம் ரூபா நிதியும் முழுமையாக வீடுகளை கட்டிமுடிக்க போது மான தாகவில்லை.

உரிய திட்டப்படி வீடுகளை பூரணமாக கட்டிமுடிப்பதற்கு மேலும் மூன்று இலட்சம் ரூபா வரை தேவையாக உள்ளது.

எனவே மழை காலத்துக்கு முன் வீடுகளை முழுமையாக நிர்மாணிப்பதற்கு எவராவது முன்வருவார்களா? என குறித்த பயனாளிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

அத்தோடு, இவ் வீடுகளை அமைப்பதற்கான ஆற்று மண்ணை பெறுவதிலும் பல கட்டுப்பாடுகள் உள்ளதால் உரிய நேரத்தில் தேவையான ஆற்று மண்ணை பெறமுடியாதிருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-84)

# வற்றாப்பளை கிராமத்திற்கு உப அஞ்சல் அலுவலகம் தேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வற்றாப்பளை கிராம சேவையாளர் பிரிவு பரந்த பிரதேசமாக இருப்பதால் அப்பகுதியில் உப அஞ்சல் அலுவலகம் ஒன்றை அமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

வற்றாப்பளை கிராமத்தில் உப அஞ்சல் அலுவலகம் அமைக்கப்படாமையால் 6 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள முள்ளியவளையில் அமைந்திருக்கும் அஞ்சல் அலுவலகத்திற்கே இப்பகுதி மக்கள் செல்ல வேண்டியுள்ளது.

வற்றாப்பளையில் உப அஞ்சல் அலுவலகம் அமைக்கப்படுமாயின் இங்கு வாழும் 558 குடும்பங்களும் கேப்பாபிலவில் உள்ள 280 குடும்பங்களும் நன்மையடைய முடியும்.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் வற்றாப்பளையில் உப அஞ்சல் அலுவலகத்தை அமைத்துதர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# உர வகைகள் இன்றி விவசாயிகள் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் போக நெற்செய்கைக்கான ஆயத்த நடவடிக்கைகளை விவசாயிகள் மிகவும் தீவிரமாக மேற்கொள்ள ஆரம்பித்த நிலையில் இவர்களுக்கான உர வகைகளை பெற்றுக் கொள்வதில் கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் காலதாமதம் ஏற்படுமோ என விவசாயிகள் ஐயம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நெல்லை விதைக்கும் போதே அவற்றுக்கு அடிப்படை உரமாக பயன்படுத்துகின்ற உர வகைகள் கடந்தமுறை காலதாமதமாகவே கிடைக்கப்பெற்றது.

இதனால் விவசாயிகள் உரிய காலத்தில் இவற்றை பயன்படுத்த முடியாமலும் அதிகவிளைச்சலை பெற முடியாமலும் சிரமமடைய வேண்டி ஏற்பட்டது.

இந்த போகத்திற்குரிய உரவகைகளையும் விவசாயிகளுக்கு முன்கூட்டியே பெற்று தருவதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படுவதாக தெரியவில்லை.

அத்துடன் உர மானியங்கள் கடந்த காலங்களைப் போன்று கிடைக்குமா? கிடைக்காதா? என்ற குழப்ப நிலையிலும் இவ் விவசாயிகள் உள்ளனர்.

அதிலும் சிறு நிலப்பரப்புகளில் பயிர் செய்யும் விவசாயிகளே இதனால் பெரிதும் பாதிக்கப்படக் கூடிய நிலை உள்ளது.

எனவே, துறைசார்ந்தவர்கள் உரியகாலத்தில் இந்த உரப் பசளைகளை கிடைக்கச் செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் காத்திருக்கின்றனர். (ம-254)

# சுகாதாரமற்ற உணவகங்களை மூடிவிடுமாறு மன்று உத்தரவு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சுகாதாரமற்ற முறையில் உணவகங்களை வைத்திருந்தவர்களுக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் சுகாதாரமற்ற உணவகங்களை மூடிவிடுமாறும் முல்லை.மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நுகர்வுக்கும் பாவனைக்கும் உதவாத வகையிலும் சுகாதாரமற்ற முறையிலும் உணவுப் பதார்த்தங்களை வைத்து விற்பனை செய்தவர்களென குற்றஞ்சாட்டப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட மூவருக்கு தலா 30 ஆயிரம் ரூபா தண்டப்பணத்துடன் உணவகத்தை சுகாதாரமான முறையில் வைத்திருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் வரை குறித்த 3 உணவகங்களையும் தற்காலிகமாக மூடிவிடுமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.




மேலும் கைப்பற்றப்பட்ட இறைச்சி, மீன் போன்ற உணவுப் பதார்த்தங்களை அழித்துவிடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

# சுகாதாரமற்ற வெதுப்பகம் சுகாதார துறையினரால் கண்டுபிடிப்பு



(குருமன்காடு)

வவுனியா மாடசாமி கோவில் பகுதியில் அமைந்திருந்த வெதுப்பகம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியா சுகாதாரத்துறையினரால் பிரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன் போது சுகாதாரமற்ற பல திண்பண்டங்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன என வவுனியா சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

சுகாதார பிரிவிற்கு பொதுமக்கள் வழங்கிய முறைப்பாடுகளை அடுத்தே, இந்த திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி கே.ஜீவராஜா, மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் கே.மேஜெயா, பொது சுகாதார பரிசோதகர்களான கே.சிவரஞ்சன் மற்றும் எம்.ரஞ்சன் ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது பல திண்பண்டங்கள் மீட்கப்பட்டதுடன் சுகாதாரமற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களையும் கைப்பற்றி அழித்திருந்தனர்.

இதேவேளை, இங்கு உற்பத்தி செய்யப்பட்ட குளிர்பான பக்கெற்றுக்களில் வேறு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுவதற்கான போலியான முகவரியும் பொறிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் குறித்த வெதுப்பகத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக வவுனியா சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-250-266)

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீதுதான் பெரும்பாலான இராச்சியங்கள் அழிந்தன.

– யங்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அமைதியான தசரதர் குடும்பம் பட்டாபிஷேகத்தால் குழம்பிப்போனது

அயோத்தி மாநகரின் மாமன்னன் தசரதச் சக்கரவர்த்தியின் குடும்பம் மிகவும் அமைதியானது. ஆனந்தமானது.

தசரதருக்கு கோசலை என்ற மனைவியும் கையேகி, சுமத்திரை என இரு துணைவிகளும் இருந்தனர்.

ஐயா! மனைவிக்கும் துணைவிக்கும் என்ன வித்தியாசம் என்று நம்மைக் கேட்டுவிடாதீர்கள்.

அப்படி ஒரு கேள்வி கேட்டுத்தானாக வேண்டும் என்றால், அந்தக் கேள்வியை கலைஞர் கருணாநிதியிடம் கேட்பதுதான் பொருத்தமானது.

மனைவி, துணைவி என மூன்று பெண்கள் அந்தப்புரத்தில் இருக்க கூடவே அவர்களின் பிள்ளைகளும் அங்கிருக்க ஒரு குடும்பம் எப்பாடுபடும் என்பதை நாம் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற தேவை இருக்காது.

ஆனால் மன்னன் தசரதனின் குடும்பம் ஒற்றுமையாக ஆனந்தமாக அமைதியாக இருந்தது என்பதுதான் இங்கு நோக்க வேண்டிய கருப்பொருள்.

மற்றவர்கள் போற்றிப் பணிகின்ற அளவில் இருந்த தசரதச் சக்கரவர்த்தியின் வீட்டில் இராமருக்குப் பட்டாபிசேகம் நடத்தத் தீர்மானிக்கப்படுகிறது.

அந்தத் தீர்மானம் அமைதிப் பூங்காவாக இருந்த தசரத மன்னனின் குடும்பத்தில் சூறாவளியாக வீசுகிறது. மன்னன் தசரதன் மரணமடைகிறான்.

வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளின் வரவுக்காக நம் ஊர்களில் ஏழு எட்டு நாட்களாக இறுதிச் சடங்கிற்காக காத்திருக்கும் உடலங்கள் போல காடு சென்ற இராமரின் வரவுக்காக தசரதனின் உடல் காத்திருக்கிறது.

என்னே கொடுமை! இலண்டனில் சுவிஸில் கனடாவில் பிரான்சில் இருந்து பிள்ளை வர வேண்டும் என்பதற்காக இறந்தவரின் உடலை வைத்திருப்பது பெருமைக்குரியது.

அதை வருவோர் போவோரிடம் பெருமையாகக் கூறிக் கொள்ளலாம்.

அனேகமான மரணச்சடங்குகளில் வெளிநாட்டுப் பிள்ளைகளின் வருகைதான் பேசுபடு பொருளாக இருந்துவிடுகிறது.

ஆனால் தசரதனின் மாளிகையில்–அயோத்தி மாநகரில் இராமபிரான் காட்டில் இருந்து வரவேண்டும் என்ற செய்தியே கதைபடு பொருளாயிற்று. எப்படி இருக்கும் நிலைமை?

மாமன்னன் தசரதன் மரணித்துவிட்டார். எல்லோரினதும் அன்புக்குரிய இராமர் காட்டுக்குச் சென்று விட்டார். அட! எந்தக் குடும்பத்திற்கும் இப்படியொரு துன்பம் வரக்கூடாதல்லவா?

என்ன செய்வது! இராமருக்குப் பட்டாபிசேகம் என்ற பதவி வழங்கலின்போதுதான் எல்லாப் பிரச்சினையுமே ஏற்பட்டது. பதவி என்றாலே அங்கு பிரச்சினைதான்.

இதற்கு வாய்ப்பாக முன்னாளில் தசரதன் கையேகிக்கு கொடுத்த இரு வரமும் சேர்ந்து கொள்ள நிலைமை கடுமையான துன்பமாயிற்று.

இராமாயணத்தின் இக்கதை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் சாலப்பொருந்தும்.

ஆம்! அமைச்சுப் பதவியால் கூட்டமைப்புக்குள் கடும் போட்டி நிச்சயம் ஏற்படும்.

அமைச்சுப் பதவி எனக்கு உனக்கு என்ற இழுபறியில் தசரதன் போல சம்பந்தன் ஐயாவும் முன்னாளில் உனக்கு அமைச்சுப் பதவி தருவேன் என்று யாருக்கேனும் வரம் கொடுத்திருந்தால் அதுவும் சேர்ந்து கூட்டமைப்பின் கூட்டை உடைத்துவிடும்.

அட! ஒற்றுமையாக இருந்த கூட்டமைப்பும் பட்டாபிசேகத்தால் குழம்பிப் போனது என்று மக்கள் கதைப்பர்.

தசரதனின் குடும்பத்தில் நிகழ்ந்த குழப்பம் நம் தமிழ் மண்ணில் நிகழாது இருக்க விட்டுக் கொடுப்பெனும் பெருமருந்தை நாம் அனைவரும் அருந்துவோம்.

## மோசடியற்ற தேர்தலுக்கு 17ஆவது திருத்தம் அவசியம்

நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றுள்ள நிலையில், எதிர்வரும் காலங்களில் தேர்தல் நீதியானதும் நியாயமானதுமாக நடைபெறவேண்டுமாயின் அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்தை மீளவும் ஸ்தாபிக்க வேண்டுமென முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் வராவெல தெரிவித்துள்ளார்.

அத்துடன் சர்வாதிகார போக்குடைய ஜனாதிபதி முறைமையுடன் விகிதாசார பிரதிநிதித்துவங்கள், விருப்பு வாக்கு முறைமைகளை நீக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக வடமேல் மற்றும் மத்திய மாகாணத்தில் அரச அதிகாரத்தை முழுமையான முறையில் பிரயோகித்து இரு மாகாண சபைகளையும் அரசு வெற்றி கொண்டுள்ளது.

அத்துடன் கண்டி மாவட்ட செயலகத்தில் வாக்குகளை கணக்கிடும்போது பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக அக்கணக்கெடுப்பின் போது மாவட்ட செயலக வளாகத்தில் மின் தடைப்பட்டமையானது சந்தேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இதேவேளை குண்டசாலையின் வாக்குப்பெட்டிகளை கொண்டுவரும் சமயம் தலதாமாளிகைக்கு அருகில் எந்தவொரு வாகனமும் பின்தொடர அனுமதிக்கப்படவில்லை. எனவே இத் தேர்தலில் அரசு தன்னுடைய முழு அதிகாரத்தையும் பிரயோகித்துள்ளமை தெட்டத் தெளிவான ஒரு விடயமாகும்.

ஆகவே தேர்தல் நீதியானதும் நியாயமானதுமாக நடைபெறவேண்டுமாயின் அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள பொலிஸ் ஆணைக்குழுவை மீளஸ்தாபிக்க வேண்டும். அதன்போதே தேர்தல் நீதியானதும் நியாயமானதுமாக நடைபெறும்.

அரசியலமைப்பின் 17–வது திருத்தச் சட்டத்தில்உள்ளடங்கியபொலிஸ்ஆணைக் குழுவை இவ்வரசு நீக்கியுள்ளது.

எனவே நாட்டில் நடைபெறும் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறாது என இராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ–7)

## யாழ்ப்பாணம் நூலகத்துக்கு நூல்களை சேகரித்தவர் மரணம்

உலகத் தமிழர்களின் சொத்தாக இருந்த யாழ்ப்பாண பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி நள்ளிரவு நேரத்தில் தீ வைத்து எரிக்கப்பட்டதை தொடர்ந்து எரியூட்டப்பட்ட நூலகத்துக்காக நூல்களை திரட்டிய நாமக்கல்லைச் சேர்ந்த ப.இராசாமி மரணமானார்.

இவர் நேற்றுமுன்தினம் அதிகாலை ஐந்து மணிக்கு இவ்வுலகத்தை விட்டு பிரிந்து விட்டார் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரியதாக அண்ணளவாக 97ஆயிரம் அரிய நூல்களுடன் திகழ்ந்த இந்த நூலகம் எரிந்தபோது கண்ணீர் விட்டு அழாத தமிழர்களே இல்லை.

இடைவிடாத பயணம் தேடல் என்று நா.ப.இராமசாமியிடம் இன்று 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரிய நூல்களைக் கொண்ட ஒரு நூலகத்தை பாதுகாத்து பராமரித்து வந்துள்ளார்.

2004ஆம் ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணத்துக்கு வந்த இராமசாமி ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 3,800 நூல்களை அன்பளிப்பாக வழங்கியதோடு மீதமாகமுள்ள தன்னிடமுள்ள நூல்கள் அனைத்தும் யாழ்ப்பாண நூலகத்துக்கு என தன்னுடைய உயிலில் எழுதி வைத்துள்ளார் என்றும் அந்த செய்திகளில் தெரிவிக்கப்படுகின்றது. (அ–7)

## சத்திய தரிசனம்



முட்டாள் அனைத்து அறிவிலும் தேர்ந்துள்ளான். நன்கு பாண்டித்தியம் பெற்றவனைப்போல உலவுகிறான். ஆயினும் அவன் யார் என்பதனையே அவன் அறியவில்லை. அவனது தர்க்கங்களில் இருந்தே அவன் பிர பலமாகிறான். அவன் இறக்கும் வரையில் படித்தபடியே இருக்கிறான். அப்படியும் எங்ஙனம் இறவாமல் இருப்பது என்பதனை அவன் அறிவதில்லை. பேரானந்தமானது புத்தகங்களில் இருந்து வருவது இல்லை. அர்ப்பணிக்கப்பட்ட பணியால் மட்டுமே அதனை அடைய இயலும்.

இன்று மனிதன் புத்தகங்களைப் படிப்பவன் வாயிலாகச் செய்திகளைத் திரட்டுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டு உள்ளான். அவன் விவாதம் மற்றும் விளக்கங்களில் ஆழ்ந்து ஈடுபடுவதனை அதிகம் விரும்புகிறான். அவனால் விடயங்களை ஆராய்ந்து அதைப்பற்றிப் பேசிட இயலும். ஆனால் ஆன்மீகத் துறையில் கற்றல், சோதித்தல் மற்றும் ஆராய்தல் போன்றன அதிகதூரம் உங்களை இட்டுச் செல்வதில்லை. உண்மையான பயிற்சியிலிருந்து வெளிப்படும் அகத்தின் அனுபவமே தேவைப்படுகிறது.

களங்கம் அற்ற, படிக்காத, பாதி குருடான குழந்தைகளின் தவிர்க்க இயலாத ஆசிரியராக குருவானவர் அதிகாரத்தின் நாற்காலியில் அமரக்கூடாது. அதிகாரத்தால் செல்வாக்கு பெற்ற பெருமிதத்துடன் உள்ள அரியணை செருக்காகும். குழந்தைகள் முன்பு அடக்கத்துடன் இருந்து அதிகாரத்தின் குரலைத் துறந்து கொள்ளுங்கள். இதுவே உங்களுக்கான சாதனை.

## சகோதரத்துவ விழா

சாவகச்சேரி வேம்பிராயில் அமைந்துள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான கோட்டத்தினரால் இவ்வாண்டுக்கான சகோதரத்துவ விழா முன்னெடுக்கப்படவுள்ளது. எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி மாலை 6 மணிக்கு வள்ளல் பெருமான் உலகத்திற்கு வகுத்து தந்த பதினொரு கொள்கைகள் எனும் தலைப்பில் ஐ.இராமானுயம், திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகிய இந்திய அறிஞர்களாலும் கனகசபாபதி கேதீஸ்வரன், செ.சுப்பிரமணியம், க.றஜன் போன்ற யாழ்.அறிஞர்களாலும் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

விழா தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நடைபெற்று, இறுதி நாளான 5 ஆம் திகதி சனிக்கிழமை போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (அ–9–29)

## விவேகானந்தரின் படம் திரைநீக்கம்

பருத்தித்துறை சாரதா சேவா ஆச்சிரமத்தின் அனுசரணையுடன் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை காலை 8.15 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் பாடசாலை அதிபர் திருமதி பாலராணி சிறிதரன் தலைமையில் விவேகானந்தரின் படம் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது. (அ–7)

## மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அனோமா

எதிர்வரும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டுக்கு பின்னர் கலைக்கப்படவுள்ள மேல் மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக அனோமா பொன்சேகாவை நிறுத்த ஜனநாயகக் கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகின்றது. மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட அனோமா பொன்சேகா விருப்பம் வெளியிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் சரத் பொன்சேகாவின் கட்சி மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் 5 ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் மூன்றாவது அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளது.

சரத்பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது நடைபெற்ற பல போராட்டங்களில் அனோமா பொன்சேகா கலந்து கொண்டதுடன் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுள்ளார்.

இந்தநிலையில் நடைபெறவுள்ள மேல் மாகாண சபைத் தேர்தலில் அனோமா பொன்சேகா என்ற துருப்புச்சீட்டை களமிறக்க பொன்சேகா தயாராகியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (அ–7)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பிரம்ம முகூர்த்தத்தில் விழித்திருந்து படிக்க வேண்டும் என்பது ஏன்?



பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து படிப்பதால் பெரும் நன்மையடையலாம் என்று முதியோர்கள் கூறும் போது இளைஞர்கள் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் தனிக்கல்விக்குச் செல்வதன் விசேடத்தைப் பற்றி முதியோர்களே போதிக்கவும் முன்வரலாம்.

ஆனால் அதிகாலை எழுந்து படித்தால் அது ஒருபோதும் மனதிலிருந்து மறந்து போவதில்லை என்பது கல்விப் பிரச்சினைகளைக் குறித்த ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது.

சூரியன் உதித்தெழுவதற்கு முன்பு நாற்பத்து எட்டு நிமிடங்களுக்கு முன் பிரம்மமுகூர்த்தம் ஆரம்பமாகின்றது. பிரம்மா பெயரால் அறியப்படும் இம்முகூர்த்தம் அவருடைய தர்மபத்தினியான சரஸ்வதிதேவி விழித்துச் செயற்படும் நேரம் என்பதே நம்பிக்கை. அதனால் இந்நேரத்தை சரஸ்வதி யாமம் என அழைக்கின்றோம். தலையின் இடதுபக்கம் இருக்கும் கல்வி மையம் செயற்படும்போது படிப்பது மிகப் பயனளிக்கும் என்பது நவீன கண்டுபிடிப்பு. மேலும் காலையில் கொளுத்தி வைக்கும் குத்து விளக்கின் சக்தி கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் என்பதும் கண்டறிந்துள்ளனர். இதை மனதிற்கொண்டுதான் பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்து விளக்கு கொளுத்தி கல்வி பயில வேண்டும் என்று முதியோர் கூறுகின்றனர்.

# சர்வதேச படகுப் போட்டி இந்தியாவில்




சர்வதேச ரெகட்டா பாய்மர படகுப் போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு பாய்மர படகு சங்கம் சார்பில் சர்வதேச பாய்மர படகு போட்டி (ரெகட்டா) எதிர்வரும் 30ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 7ஆம் திகதிவரை சென்னையில் நடைபெறுகிறது.

இதில் இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து உள்பட 10 நாடுகளை சேர்ந்த சுமார் 125 வீரர்கள் கலந்து கொள்கிறார்கள். ஆப்டிமிஸ்ட், 29இஆர், லேசர் 4.7 ஆகிய 3 விதமான படகு பிரிவுகளில் போட்டி நடக்கிறது. போட்டியை மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் ஜி.கே.வாசன் ஆரம்பித்து வைக்கிறார்.

# வாகை சூடியது டைடன்ஸ்

சம்பியன்ஸ் லீக் ரி20 கிரிக்கெட் போட்டியில் பிரிஸ்பேன் ஹீட் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டைட்டன்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்மூலம், பிரிஸ்பேன் அணி தொடர்ந்து இரண்டாவது தோல்வியைப் பதிவு செய்துள்ளது. இந்த ஆட்டம் பஞ்சாப் மாநிலம், மொஹாலியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பிரிஸ்பேன் ஹீட் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. இதைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய டைட்டன்ஸ் அணி 18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

அணியில் மூவர் மட்டுமே இரட்டை இலக்கத்தை எட்டினர். அதிகபட்சமாக அணித் தலைவர் ஹென்ரி டேவிட்ஸ் 39 ஓட்டங்களும் கெய்னோ குன் 31 ஓட்டங்களும், ஏபி டி வில்லியர்ஸ் 28 ஓட்டங்களும் எடுத்தனர். பிரிஸ்பேன் தரப்பில் மேத்யூ கேலே 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

124 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பிரிஸ்பேன் ஹீட் அணி, 20 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால், அந்த அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பிரிஸ்பேன் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அப்போது கைவசம் 3 விக்கெட்டுகள் மட்டும் இருந்தன. ஆனால், முதல் 2 பந்துகளில் 2 விக்கெட்டை இழந்து தடுமாறிய பிரிஸ்பேன் அணி, ஆட்டத்தின் கடைசி பந்தில் கடைசி விக்கெட்டையும் இழந்து தோல்வியைத் தழுவியது.



அணித் தலைவர் ஹோப்ஸ் மட்டும் அதிகபட்சமாக 37 ஓட்டங்களைப் பெற்றார். டைட்டன்ஸ் தரப்பில் லாங்கே 13 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அவரே ஆட்ட நாயகன் விருதையும் பெற்றார். இந்த ஆட்டத்தில் இரு அணிகளையும் சேர்த்து மொத்தம் 7 பேர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை எட்டினர்.

# அசத்தியது சண் ரைசர்ஸ்

திசாரா பெராரேவின் அதிரடியில் டிரினிடாட் அன்ட் டொபாகோவுக்கு எதிரான ஆட்டத்தில் சண் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மொஹாலியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற டிரினிடாட் அன்ட் டொபாகோ அணிக்கெதிரான சம்பியன்ஸ் லீக் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஹைதராபாத் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டிரினிடாட் அன்ட் டொபாகோ அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 160 ஓட்டங்களைப் பெற்றது. ஓட்டம் ஏதுமின்றி முதல் விக்கெட் இழந்தபோதும், டேரன் பிராவோவின் அதிரடியால் அந்த அணி நல்ல சிறப்பான இலக்கை அடைந்தது. 44 பந்துகளைச் சந்தித்த பிராவோ 4 சிக்ஸர், 5 பவுண்டரிகளுடன் 66 ஓட்டங்களை எடுத்தார். ஹைதராபாத் தரப்பில் இஷாந்த் சர்மா, பெராரே மற்றும் சமி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் களமிறங்கிய ஹைதராபாத் அணி 19.3 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. அந்த அணியின் முன்னணி வீரர்கள் குறைவான ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அதனால் ஹைதராபாத் அணியின் வெற்றி குறித்து சந்தேகம் எழுந்தது. ஆனால், 5ஆவது விக்கெட்டாக களமிறங்கிய பெராரே பந்துகளை பவுண்டரிகளுக்கும், சிக்ஸர்களுக்கும் விரட்டினார்.

இதனால், ஹைதராபாத் சண் ரைசர்ஸ் அணி 3 பந்துகள் மீதம் இருக்கையிலே வெற்றி பெற்றது. 32 பந்துகளை எதிர்கொண்ட பெராரே 4 சிக்ஸர் மற்றும் 4 பவுண்டரிகளுடன் 57 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை களத்தில் இருந்தார்.

டிரினிடாட் அன்ட் டொபாகோ தரப்பில் சுனில் நரைன் 9 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இந்த வெற்றியின் மூலம் ஹைதராபாத் சண் ரைசர்ஸ் அணி 4 புள்ளிகளைப் பெற்றது.

2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன், முக்கியமான நேரத்தில் அதிரடியாக விளையாடி அணிக்கு வெற்றி தேடித் தந்த பெராரே, ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார்.



சம்பியன்ஸ் லீக் போட்டிகளின்போது வருணபகவானின் ஆதிக்கமும் அதிகமாகக் காணப்படுகின்றது.
அந்த வகையிலே நேற்று முன்தினம் மொகாலியில் ஆட்டம் நடைபெறுவதற்கு முன்னர் பொழிந்த மழையானது மைதானத்தில் தேங்கி நின்றது. இந்த மழை நீரை நீர் உறுஞ்சிகளால் அப்புறப்படுத்துவதை இங்கு காணலாம்.

# ரியல் மாட்ரிட் வெற்றி

கெடாபே அணிக்கு எதிரான லா லிகா காற்பந்து தொடரின் லீக் போட்டியில், ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா காற்பந்து தொடர் நடைபெற்றுவருகிறது. இதன் லீக் போட்டியில் ரியல் மாட்ரிட், கெடாபே அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் கெடாபே அணிக்கு, லபிதா (5ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மாட்ரிட் அணியின் பெபே (19), கிறிஸ்டியானோ ரொனால்டோ (33) பதிலடி கொடுத்தனர்.

பின் இரண்டாவது பாதியில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ரியல் மாட்ரிட் அணிக்கு இஸ்சோ (59), கிறிஸ்டியானோ ரொனால்டோ கோல் அடித்தனர். இதற்கு கெடாபே அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், ரியல் மாட்ரிட் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றொரு போட்டியில் வாலன்சியா அணி, செவில்லா அணியை 3-1 எனற கோல் கணக்கில் வீழ்த்தியது.

# போர்க்குற்ற விசாரணை...

ஓகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு ஒரு வாரகால விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அப்போது அவர் கண்டதையும், கேட்டதையும், விசாரித்து அறிந்ததையும் அவரின் சார்பில், மனித உரிமைகள் பேரவையின் துணைத் தலைவர் வாயிலாக வாய்வழி அறிக்கையாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

போரின்போது பொதுமக்கள் தரப்புக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள், இராணுவம் விசாரணையின்றி சுட்டுக் கொன்றதாக குற்றம்சாட்டும் சனல் 4 வெளியிட்ட வீடியோ போன்றவை தொடர்பில் மனித உரிமைகள் பேரவை கவலை வெளியிட்டும் இது தொடர்பில் முன்னேற்றங்கள் ஏற்பட்டதாகத் தனக்குத் தெரியவில்லை என்று நவிபிள்ளை கூறியுள்ளார்.

குற்றச்சாட்டுகள் தொடர்பாக இராணுவமும், கடற்படையும் நடத்தும் விசாரணைகள் நம்பிக்கையை அளிப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

போர்க்குற்றங்கள் குறித்த தேசிய விசாரணைகள் நம்பகமான முறையில் நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் இல்லாவிட்டால் சர்வதேச சமூகம் தனியாக விசாரணை நடத்தும் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டிய கடமை இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்

விடுதலைப்புலிகள் தொடர்புடைய போர் குற்றங்களை முறையாக விசாரிக்கப்பட வேண்டும் என்று தான் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் இது தொடர்பில் சம்மந்தப்பட்டோர் மீதான வழக்குகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்றும் ஐநா ஆணையர் வலியுறுத்தியுள்ளார்.

போர் குற்றங்கள் குறித்து இலங்கை அரசு நம்பகமான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும், அதையும் மார்ச் மாதத்துக்குள் செய்யவேண்டும், அப்படி செய்யாவிட்டால் சர்வதேச சமூகம் தனியாக ஒரு விசாரணையை நடத்த வேண்டிவரும் என்று ஐநா மனித உரிமைகள் பேரவையின் ஆணையர் நவிபிள்ளை எச்சரித்துள்ளார்.

திருகோணமலை கடற்கரையில் 5 மாணவர்கள் கொல்லப்பட்ட வழக்கு தொடர்பில் சட்ட மா அதிபர் தன்னிடம் விளக்கமளித்தார் என்றும் இந்த வழக்கு விசாரணை தொடர்பில் தொழில்நுட்ப உதவிகளை அளிக்கத் தயாராக இருப்பதாக இலங்கை அரசிடம் தெரிவிக்கபட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏசிஎப் நிறுவனத்தைச் சேர்ந்த 17 பேர் கொல்லப்பட்ட வழக்கு உள்ளிட்ட பலவற்றில் முன்னேற்றம் இல்லாத நிலையையும் தாம் அவதானிப்பதாக நவிபிள்ளை தெரிவித்தார்.

இலங்கைக்கு சென்றபோது தான் சென்ற கிராமங்களுக்கு, தான செல்வதற்கு முன்பும், பின்பும் பொலிஸாரும் இராணுவமும் சென்றது என்று குறிப்பட்ட நவிபிள்ளை, திருகோணமலையில் தன்னை சந்தித்தவர்கள் தன்னிடம் என்ன கூறினார்கள் என்பது குறித்து விசாரிக்கப்பட்டார்கள் என்றும் தெரிவித்தார். இது இலங்கை ஜனாதிபதி மற்றும் வெளியுறவுச் செயலரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது என்றும் பழிவாங்கும் நடவடிக்கைகள் குறித்த செய்திகள் மீது ஐநா மனித உரிமைகள் ஆணையம் நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சியும், ஜனநாயக நிறுவனங்களும் மதிப்பிறக்கம் செய்யப்படுவது மற்றும் அருகிப்போவது குறித்து தான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக கூறிய நவிபிள்ளை,

17 ஆவது சட்ட திருத்தத்தை மீண்டும் கொண்டுவருவது மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளை நீதிமன்றம் மேலாய்வு செய்ய வழி செய்யப்பட வேண்டும் என்று படிப்பினைகள் ஆணைக்குழு தெரிவித்திருந்த பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என்றும் அவர் யோசனை தெரிவித்துள்ளார்.

வட மாகாணத் தேர்தல் நடைபெற்றதை வரவேற்றுள்ள நவிபிள்ளை, 13 ஆவது சட்ட திருத்தம் அமல்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்று நம்புவதாகத் தெரிவித்தார் நவிபிள்ளை.

ராணுவப் பிரசன்னம்

போர் முடிந்து நான்கு ஆண்டுகளான பிறகும் அங்கு காணப்படும் கணிசமான இராணுவப் பிரசன்னம் குறித்து ஐ நா ஆணையர் கவலை வெளியிட்டார்.

பெண்கள்,சிறுமிகள் மற்றும் பலவீனமான நிலையில் இருக்கும் பெண்களின் தலைமையிலான வீடுகளில் இருக்கும் பெண்கள் இராணுவத்தால் பாலியல் அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்க ஆளாகக் கூடிய சூழல் குறித்து கவலை வெளியிட்ட நவிபிள்ளை, பாலியல் துஷ்பிரயோகங்களை அரசு கிஞ்சிதமும் சகிக்கக் கூடாது என்று அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

தனியார் நிலங்களை இராணுவத் தேவைகளுக்காக கட்டாயமாக கையகப்படுத்துவது குறித்த ஆவணங்கள் நவிபிள்ளைக்கு அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட மாகணத்தில் சிவில் நிர்வாகத்திலும், பொருளாதார நடவடிக்கைகளிலும், கல்வி, விவசாயம், சுற்றுலா போன்ற துறைகளிலும் இராணுவத்தின் பங்களிப்பு அதிகம் காணப்படுவதாகவும் அவர் அவதானித்துள்ளார். சிவில் நிர்வாகத்துக்குட்பட்ட விடயங்களில் இருந்து இராணுவத்தை ஒரு காலவரைக்குள் விலக்கிக் கொள்ளுமாறு அரசிடம் நவிபிள்ளை தெரிவித்துள்ளார்.

கற்றறிந்த பாடங்கள் ஆணைக்குழு அளித்த பரிந்துரைகளில் கூடுதலாக 53 பரிந்துரைகளை அமல்படுத்த அரசு முன்வந்துள்ளதை பாராட்டியுள்ள மனித உரிமை கள் ஆணையர் அதே நேரம் அரசு இது தொடர்பில் ஒரு பொது விவாதத்தை நடத்தினால் அதனால் கூடுதல் பயன் கிடைக்கும் என்றும் கூறியுள்ளார்.

காணாமல் போனோர்

காணமல் போனோர் நிலையும் இந்த அறிக்கையில் முக்கிய இடத்தை பிடித்தது.

கடந்த 1990 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடையில் வடக்கிலும் கிழக்கிலும் காணாமல் போனோர் குறித்து விசாரிக்க அரசு ஒரு குழுவை அமைத்திருந்தாலும், போருக்குப் பிறகு கொழும்பிலும் நாட்டின் இதர பகுதிகளிலும் வெள்ளை வான் கடத்தல் தொடர்பில் விசாரணை நடக்காது என்பதால் இந்த ஆணையத்தின் வரம்புகளை விரிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்துள்ளார். காணாமல் போனோர் குறித்து அரசு முன்பு அமைத்த 5 ஆணையங் களால் பயனேதும் ஏற்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

காணமல் போனோர் தொடர்பிலான சர்வதேச ஒப்பந்தத்தை 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் கைச்சாத்திடுவதன் மூலம் இது தொடர்பில் அரசுக்குள்ள உறுதிப்பாட்டை காட்ட முடியும் என்றும் காணமல் போனோர் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்த கடத்தி காணமல் போனோர் தொடர்பிலான ஐ நா நிபுணர் குழுவின் சேவைகளை அரசு பயன்படுத்திக் கொள்ளும் என்றும் தான் நம்புவதாகவும் அவர தெரிவித்தார்.(எ-11)

# அரசியல் தீர்வும்...

யில் இன்னும் ஒரு நடவடிக்கையும அரசால் எடுக்கப்படவில்லை என்றும் சம்பந்தன் குற்றஞ்சாட்டினார்.

இலங்கையின் வட மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, இதையும் சர்வதேச சமூகம் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்று மஹிந்த கூறியதற்கு பதிலளித்த சம்பந்தன், அபிவிருத்தி என்பது ஒரு மாயை என்றார்.

வட மாகாணத்தில் நடந்து முடிந்த தேர்தல்கள்கூட பெரும் சர்வதேச அழுத்தத்தின் பின்னணியில்தான் நடந்து முடிந்தன என்று கூறிய சம்பந்தன், இந்தத் தேர்தலில் பல குறைகளை பட்டியலிடமுடியும் என்றும் ஆனாலும் குறைகளை மீறி, மக்கள் தங்களது கருத்தை தெளிவாக அரசுக்கு உணர்த்தியிருக்கிறார்கள் என்றும் சம்பந்தன் கூறினார்.

இந்தத் தேர்தலை ஒரு வாய்ப்பாக அரசு பயன்படுத்தி, உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் சம்பந்தன் கோரினார்.

அரசு நியமித்த நல்லிணக்க ஆணையத்தின் பரிந்துரைகளை அமல்படுத்தினாலே கூட, விமர்சனங்களிலிருந்து அரசு விடுபடலாம் என்று கூறிய சம்பந்தன் ஆனால் இது குறித்து அரசுக்கே ஒரு திடமான நிலைப்பாடு இல்லை , எனவே தான் இந்தப் பரிந்துரைகளைக்கூட அமல்படுத்த முடியவில்லை என்றும் கூறினார்.(எ-11)

# இலங்கையில் தோற்...

அமைந்துள்ள ஐ.நா தலைமையகத்தில், நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சந்திப்பில் ஜனாதிபதி மகிந்தவுடன், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன, பதில் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குண வர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

அதேவேளை, ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனுடன், ஐ.நாவின் அரசியல் விவகார தலைவர் ஜெப்ரி பெல்ட்மன் மற்றும் மனிதவுரிமைகள் விவகார அதிகாரி ஐவன் சிமோனோவிக் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது இலங்கையில் போருக்குப் பின்னரான நிலைமைகள் மற்றும் ஐ.நாவுடனான இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புகள் தொடர்பில் இவ்விரு தரப்பினரும் விவாதித்ததாக ஐ.நா தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும், மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பில் பான் கீ மூன் பாராட்டுத் தெரிவித்ததாகவும் இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் முழுமையான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் இதன் போது வலியுறுத்தியதாகவும் இவ்றிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)

# 13ஆவது திருத்...

இலங்கை அரசாங்கமும், தமிழ்த தேசியக் கூட்டமைப்பும் இணைந்து செயலாற்ற விருப்பம் வெளியிட்டுளளமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

வட மாகாண மக்களின் அவசர தேவைகள் குறித்து இவ்விரு தரப்பினரும் ஆக்கபூர்வமான முறையிலும், பரஸ்பர விட்டுக்கொடுப்புடனும் இணைந்து செயற்பட வேண்டும்.

சமூகங்களுக்கு இடையில் நிலையானதும், உண்மையானதுமான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு அணுகுமுறையே சிறந்த வழியாகும்.

தேர்தலின் போது இடம்பெற்ற உயர்ந்த வாக்களிப்பு மற்றும் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகள் பங்கெடுத்தமை போன்றன இலங்கை மக்கள் ஜனநாயகத்தின் பெறுமானங்கள் மீதும், மாகாண சபை மீது கொண்டுள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

சமூகங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் உள்ளது. இவ் விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்துடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் இந்தியா இணைந்து பணியாற்றும்.

சமத்துவம், நீதி, சுயமரியாதையுடன் நடத்தப்படுவதன் மூலம் இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்களும் ஐக்கிய இலங்கைக்குள் தாமும் சமமான பங்காளர் என்று உணர முடியும் என என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# சம்பந்தன் நீட்டும் கரத்தை...

கின்றோம் என்றெல்லாம் சம்பந்தன் கருத்துக் கூறவில்லை.

பிளவுபடாத நாட்டுக்குள்ளே ஒரே ஐக்கிய இலங்கை என்ற அடிப்படையில் வாழ்வதற்கு நாங்கள தயார். அதற்காக அதிகாரங்களை பகிர்ந்து கொள்வோம் என்றுதான் அவர் மிகவும் பொறுப்புடன் சொல்லியிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து, வடக்கில் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரையில் பங்கெடுத்து, பங்களிப்பு வழங்கிய ஒரேயொரு அரசியல் கட்சியின் தலைவர் என்ற முறையில் நான் சம்பந்தனின் கருத்தை வாழ்த்தி வரவேற்கின்றேன்.

சம்பந்தனின் இந்த நல்லெண்ண பிரகடனத்தை அரசாங்கம் புரிந்துகொண்டு ஏற்றுகொள்ள வேண்டும். வடக்கில் இருந்து நீட்டப்படும் சம்பந்தனின் தேசிய ஐக்கிய கரத்தை தேச நலன் கருதி இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும். இதை அரச தலைவருக்கு பக்கத்தில் ஆலோசனை சொல்ல இருப்பவர்கள் அவருக்கு விளக்கி சொல்ல வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு சிங்கள மொழியில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

தமிழ் தலைவர்களின் கருத்துகளை திரித்துப் பேசி சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டிவிட்டு அரசியல் செய்யும் ஒரு கூட்டம் இங்கு இருக்கின்றது. விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, குணதாச அமரசேகர, தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட சிலர் இந்த கூட்டத்தில் உள்ளனர்.

இவர்கள் யார்? இவர்களுக்கு நாடாளுமன்றத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்?

இந்த குட்டிக் கட்சிகாரர்கள் முழு நாட்டையும் பணயக் கைதியாக பிடித்து வைத்துகொண்டு தங்களது இனவாத இலக்குகளை நோக்கி நாட்டை வழி நடத்துகிறார்கள். இதற்கு சிறிலங்கா சுதந் திரக் கட்சி இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்தில் அரசு தலைவருக்கு பக்கத்தில் இருப்பவர்கள் இதற்கு இடம் தரக் கூடாது.

இன்று இந்த நாட்டில் தமிழர் மத்தியில் தந்தை செல்வாவின் அறவழி போர் நின்று போய்விட்டது. பிரபாகரனின் மறவழி போரும் நின்று போய் விட்டது. இனியொரு முறை மறவழி ஆயுத போராட்டம் வடக்கில், கிழக்கில் உருவாகப் போகின்றது என சிங்கள மக்களை தூண்டி விடாதீர்கள். அதற்கான சாத்தியம் இன்று இல்லை என்பது மட்டும் அல்ல, அதற்கான தேவை இன்று இல்லை என்பது தான் முக்கியமான உண்மை. இதை நான் சிங்கள மக்களுக்கு புரியும் விதத்தில் சிங்கள மொழியில் சொல்கின்றேன்.

இன்று நம்நாட்டு சிக்கல் உலக பிரச்சினையாகிவிட்டது. நமது பிரச்சினை ஐ.நா சபைக்கு போய் கூடாரம் அடித்து, பாய் விரித்து படுத்துக் குடியேறிவிட்டது.

இனிமேல் சர்வ தேச சமூகத்திடம் சொல்ல வேண்டாம் என ஒப்பாரி வைப்பதில் பிரயோஜனம் கிடையாது என்றார்.(எ-11)

# சர்வதேச அரங்கில் இலங்கை குறிவைக்கப்படுகிறது!

## ஐ.நாவில் ஜனாதிபதி உரை

(நியூயோர்க்)

பாதுகாப்பு, மனித உரிமைகள் போன்ற போர்வையில் சில நாடுகள் மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதை அனுமதிக்க கூடாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ கூறியிருக்கிறார்.

ஐ.நா மன்றத்தில் 68-வது பொதுச் சபைக் கூட்டத்தில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை உரை யாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, சர்வ தேச ஒப்புதலுடன், இந்தக் கடமை களை ஆற்றவென்று ஐ.நா. மன்றம் பணிக்கப்பட்டிருக்கும் சூழலில், இது போல சில நாடுகள் சர்வதேச அரங்கில் பொலிஸ்காரர் வேலை பார்ப்பது தேவையற்றது என்றார்.

குறிப்பாக வளர்ந்து வரும் நாடு களில் இது போன்ற காரணங்களைக் காட்டி, சில நாடுகள் தலையிட்டு வரு வது கவலையளிக்கும் விஷயம் என்றார் ஜனாதிபதி.

வேறு விதமான கலாசாரங்கள் உள்ள நாடுகளில், ஒரு குறிப்பிட்ட விதமான ஜனநாயகத்தைத் திணி க்க முயல்வது பெருங்குழப்பத்தையே விளைவிக்கும். இந்தத் தலையீடு களால் இந்த நாடுகளில் என்ன மேலதிக ஸ்திரத் தன்மை ஏற்பட்டு விட்டது என்றார்.

போருக்குப் பிந்தைய இலங்கை பற்றிக் குறிப்பிட்ட மஹிந்த, இல ங்கை பயங்கரவாதத்தைத் தோற் கடித்த பின்னர், இப்போது நாட்டில் நல்லிணக்கத்தையும் முன்னேற் றத்தையும் கொண்டுவரும் முயற் சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

வட பகுதி மக்களுக்கு சுமார் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுக்க வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இதுபோல தெளிவாகத் தெரியும் படியான முன்னேற்றங்கள் ஏற்பட் டிருக்கும் நிலையிலும், இலங்கை ஐ.நா. மன்றத்துடன் ஒத்திசைந்து இயங்கிவரும் நிலையிலும், இலங கையை சில நாடுகள் சர்வதேச அரங கில், ஐ.நா. மன்றத்தின் பல்வேறு அரங்குகளைப் பயன்படுத்தி, குறி வைப்பது சரிதானா என்றும் மஹிந்த வினவினார்.

இலங்கை விவகாரங்களுக் குத் தரப்படும் அளவுக்கு மீறிய அழு த்தம் பல நாடுகளை ஆச்சரி யப் படவைத்திருக்கிறது என்று கூறிய ஜனாதிபதி, ஐ.நா. மன்றம், இது போன்ற விஷயங்களில், சமமற்ற அளவுகோல்கள் பயன்படுத்தப் படு வதைப் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண டார்.

முப்பதாண்டு கால உள்நாட்டுப் போர் மற்றும் சுனாமி போன்றவை களையும் மீறி, இலங்கை ஐ.நா. மன்றத்தின் புத்தாயிரவளர்ச்சி இலக்குகளை எட்டியிருக்கிறது.

குறிப்பாக வறுமை ஐந்தாண்டு களுக்கு முன்னர் 25.2 சதவீதத்தி லிருந்து 2012-ம் ஆண்டில் 6.5 சதவீதமாக குறைந்திருக்கிறது. 2012-ம் ஆண்டின் மனித மேம் பாட்டு குறியீட்டெண்ணில் பட்டியலி ட்பட்டிருக்கும் 287 நாடுகளில், இலங கைக்கு 92வது இடம் தரப்பட் டிருக்கிறது என்பதையும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். (எ-11)



## தேர்தல் முடிந்துள்ள...

தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவருடைய வீட்டிற்கு எதிரில் கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டிருக்கின்றது.

யுத்தம் முடிந்ததன் பின்னர் வடக் கில் முதற்தடவையாக இப்படியான கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டிருப்பது நிலைமைகள் மிகவும் மோசமடைந்திருப்பதை காட்டுகிறது என்றார் சுரேஷ் பிரேமச்சந்தி ரன்.

காரணங்கள் எதுவுமில்லாத நிலையில் தமிழ் இளைஞர்களை வீதிக்கு இழுத்து வன்முறைகளைத தூண்டுவதற்கான முயற்சியாகத் தான் இந்த சம்பவங்கள் இடம்பெறு கிறதோ என்றும் சுரேஷ் பிரேமச்சந் திரன் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று மதியம் 12 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந் திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில்.

வடக்குத் தேர்தல் இராணுவத் தின் அச்சுறுத்தல்களிற்கு மத்தியில் தான் நடைபெற்று முடிந்துள்ளது.

தேர்தலின் போதும் தேர்தலின் பின்னரும் எமது ஆதரவாளர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர்.

இவ்வாறு தாக்குதல் மேற்கொளப வாகள் தங்களுக்கு அரசிடமிருநதும் பொலிஸாரிடமிருந்தும் இராணுவத் தடமிருந்தும்எவ்வித ஆபத்தும் வராது என்ற நம்பிக்கை யில் தான், குறிப் பாக இராணுவமே இவற்றினை செய்கின்றது.

தமிழ் இளைஞர்களினை இத் தாக்குதல்கள் மூலம் ஆயுதம் ஏந்த வைக்கவே இராணுவம் முயற்சிக் கின்றது.

இங்கு நடைபெறுகின்ற வன் முறைச் சம்பவங்கள் தொடர்பில் இங்குள்ள பிரதிப் பொலிஸ்மா அதி பர் சரியான நடவடிக்கை மேற் கொள்வதோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இராணுவத்தினரை கட்டுப்பாட்டிற்குள் வைத்து சட்டம் ஒழுங்கினை பேண வேண்டும்.

தற்போது காணாமல் போனோர் தொடர்பில் மீண்டும் விபரங்களை திரட்டும் நோக்குடன் ஜனாதிபதி ஆணைக்குழு என ஒன்று நியமிக் கப்பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு, மனிதவுரிமை ஆணைக்குழு என எத்தனையோ பேரிடம் காணாமல் போனோர் பற்றிய தகவல்கள் இருகக ஏன் இவர்கள் மீண்டும் மக்களிடம் கோர வேண்டும். ஏற்கெனவே இருக் கின்றவர்களிடம் கோரலாம் தானே!

வடக்கு மாகாண சபைக்கு புதிய அங்கத்தவர்கள் தெரிவு செய் யப்பட்டுள்ள நிலையில் ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறியின் கழ்இருந்த மாகாண சபையன் முறைகேடுகளைதற்போதுவெளக் கொணாவது அவசியமாகும்.

வடக்கு மாகாண ஆளுன ரின் உறவினர்கள் வடக்கு மாகாண சபைக்கு சொந்தமான வாகனங்களினை கொழும்பில் வைத்து தமது சொந்த தேவைக் காக பயன்படுத்துகின்றனர்.

இதனைவிட இராணுவத்தி னரும் மாகாண சபைக்கு சொந்த மான வாகனங்களினை சமூக சேவைகள் என்பதற்கு கீழ் பாவித்து வருகின்றனர்.

நிதி மோசடி என பல மோசடி கள் இடம்பெற்று வடமாகாண சபை தற்போது வங்குரோத்து நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆளுனர் சந்திரசிறியினால் பல அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்பட் டும் பழிவாங்கப்பட்டும் உள்ளனர்.

இதனைவட யாழ்போதனாவைத திய சாலையில் வைத்திய இடமாற் றத்தில் ஏற்பட்ட குழுப்பம் போன்று அனைத்து துறைகளிலும் குழப்ப நிலையே காணப்படுகின்றது.

இவ் குழப்பநிலைகளினை நீக்கி புதிய நிலையினை தூக்கி நிறுத்து வது புதிய மாகாண சபையின்கடமை யாகும்.

தேர்தலின் போது நடைபெறு கின்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு முகவர்கள் வெறும் அறிக்கையே சமர்ப்பிக்கப்படுகின்றது என குற்றச் சாட்டும் முன் வைக்கப்படுகின்றது.

இலங்கையில் தேர்தல் கண் காணிப்பு முகவர்களின் அறிக்கை நீதிமன்றில் ஒரு சாட்சியமாகக் கூட ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என் பது வருத்தத்திற்குரிய விடயம் தான்.

எனினும் நீதிக்குப் புறம்பான சம்பவங்களினை இத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் சர்வதேச கண்காணிப்பு அமைப் புக்களும் வெளிக்கொண்டு செல் கின்றது என்பது முக்கியமானதா கும் என்றார் அவர். (எ-4,11)

## அரசியல் தீர்வும்...

தலைவர் இரா.சம்பந்தன கூறியுள்ளார்.

இலங்கை மீது சில நாடுகள் குறி வைக்கின்றன, தொடர்ந்து இலங் கைக்கு தொந்தரவு கொடுக்கின்றன, ஐ.நா. மன்றத்தின் பல்வேறு அரங்கு களைப் பயன்படுத்தி இலங்கை மீது அழுத்தம் தருகின்றன என்று மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ் வாய்க் கிழமை ஐ.நா. மன்றப் பொதுச் சபை உரையில் குறிப்பிட்டதை ஏற்க முடியாது என சம்பந்தன் தெரிவித்துள் ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் கருத்துக் கள் குறித்து பிபிசி தமிழோசைக்கு கருத்து தெரிவித்த சம்பந்தன், இலங்கையில் போர் முடிந்து நான் காண்டுகளாகியும் தமிழர்களின் அடிப்படை அரசியல் பிரச்சினை களுக்கு தீர்வு கிடைக்கவில்லை என்றார்.

அரசுக்கு, இந்தப் போரின் போது பல்வேறு நாடுகள் உதவின. போரின போதும், போருக்குப்பின்னரும்மஹிந்த ராஜபக்ஷ இந்த நாடுகளுக்கும் ஐ.நா. மன்றத்துக்கும்பல்வேறு உறுதிமொழி களைத்தந்தார். இவை நிறைவேற்றப் படவில்லை. மனித உரி மைகள்குறித்த பிரச்சினை 19ம் பக்கம் பார்க்க

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 28.09.2013
Batch2 : 30.09.2013
Batch3 : 05.10.2013
Batch4 : 07.10.2013



Training
வேலை வாய்ப்பு நிறைந்த
Web Designing
Networking
Multimedia
Type Free <Course><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS 324,Palaly road, Jaffna.
Supported by UNDP/JRRP

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.